# உதயன்

விலை ரூபா 7.00

ஏடு:18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 24 புதன்கிழமை (08-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:43


# புலிகளின் எதிர்ப்பு அலையால்

# மோதல் தணிவு உப குழு 'அவுட்'!

## யாழ்.தளபதியின் கடும் போக்கே காரணம் என்று பாலசிங்கம் தகவல்

- தாய்லாந்திலிருந்து ந.வித்தியாதரன்-

**இலங்கை அரசுப் பிரதிநிதிகளையும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட மோதல் தணிவுக்கான (De - escalation) உபகுழுவை (பாதுகாப்பு உபகுழுவை) கலைத்துவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது**

**விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு அலையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.**

மோதல் தணிவு உபகுழு தொடர்பாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கொண்ட கடும்போக்கான நடவடிக்கைகளே இந்த உபகுழுவை செயலற்றதாக்கும் பிடிவாதப் போக்குக்குப் புலிகளைத் தள்ளிவிட்டது. புலிகளின் அரசியல் ஆலோசகரும் புலிகள் தரப்புப் பேச்சுக் குழுவின் தலைவருமான அன்ரன் பாலசிங்கம், உதயனுக்கு இதைத் தெரிவித்தார்.

நேற்று நொக்கம்பத்தொம் நகரில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற நான்காவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின இரண்டாம் நாள் காலை அமர்வுகளின்போது இந்த உபகுழுவை மேற்கொண்டு செயற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் விடயமும் நேற்று பேச்சுக்களில் ஆராய்வு

நொக்கம் பத்தொம்,ஜன.8

செம்மணியில் காணாமற்போனோர் விவகாரம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு, உரிய தீர்வை முன்வைக்க வேண்டும் என்று நேற்றைய பேச்சுக்களில் தாங்கள் வலியுறுத்தியதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உதயனுக்குத் தெரிவித்தார்.

குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் விவகாரம், மனிதாபிமான முறையில் நோக்கப்பட வேண்டும். பெற்றோர்கள், உறவினர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்று அரசுக் குழுவிடம் தாங்கள் வற்புறுத்தியதாக தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கையை அரசுத் தரப்பினர் ஏற்றுக்கொண்டனர். உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். (ஐ-3)


### முக்கிய செய்திகள் உள்ளே

- பேச்சின் முடிவில் பாலசிங்கம் கூறிய கருத்துகள்...
- மகளிருக்கான உப குழு
- பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே மீள்குடியமர்வு
- 'கவிக்கோ' அப்துல் ரகுமானின் பேட்டி


# பாதுகாப்பு வலயம் பற்றி இந்திய நிபுணர் திட்டம்

## அதுவரை காத்திருக்க புலிகள் இணக்கம்

நொங்கம்பத்தொம்,ஜன.8

வடக்கில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை மாற்றியமைப்பது தொடர்பான உகந்த திட்டம் ஒன்றைத் தருமாறு இந்தியாவின் இராணுவத் துறை நிபுணரான லெப்டினட் ஜெனரல் சதீஷ் நம்பியாரை இலங்கை அரசு கோரியுள்ளது. அந்தத் திட்டம் விரைவில் அரசுக்குக் கிடைக்கும். அந்தத்திட்டம் கைக்கு வந்ததும் அதனடிப்படையில் உயர் பாதுகாப்பு வலயங்களை மாற்றியமைக்கவும், தற்போது உயர்பாதுகாப்பு வலயங்கள் உள்ள பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தவும் உகந்த செயல்திட்டம் ஒன்றை அரசு முடிவுசெய்து புலிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கும்.

- இவ்வாறு நேற்று நொங்கம் பத்தொம் நகரில் நடைபெற்ற நான்காவது சுற்றுப்பேச்சுக்களின் இரண்டாம் நாள் காலை அமர்வுகளின் போது அரசுத்தரப்பினால் புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அனுமதிப்பது இழுபட்டுச்செல்வது தொடர்பாக இந்தப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர்களின் அறிக்கைக்காக அரசு காத்திருப்பு!

நொக்கம்பத்தொம்,ஜன.8

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயத்தில் சர்வதேச நிபுணர்களின் அறிக்கைகளுக்குத் தாம் காத்திருப்பதாக அரசு தரப்புப் பேச்சுக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

"இந்த விவகாரம் தொடர்பாக நாம் நியமித்துள்ள சர்வதேச நிபுணர்களின் அறிக்கைகளை நாம் எதிர்பார்த்துள்ளோம். அவர்கள் பயனுள்ள - காத்திரமான - ஆலோசனைகளைத் தருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

"இப்போதைய நிலையில் (For the time being) இந்த ஆலோசனை எங்கள் இரு தரப்புக்கும் (புலிகள், அரசு ஆகிய இரு தரப்புக்கும்) ஏற்புடையதாக இருக்கும் என்று நாம உணர்ந்துள்ளோம்.

- என்றார் பீரிஸ். (ஐ-3)

## குடாநாட்டில் டெங்கு; ஆய்வு அறிக்கை உறுதி?

யாழ்ப்பாணம்,ஜன.8

குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சல் தொடர்பாக மேலும் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக உதவிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் (பொதுச்சுகாதாரச்சேவை) டியூலா டி சில்வா இன்று மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார்.

இவரது தலைமையில் கடந்த வாரம் இங்கு வருகை தந்த நிபுணர் குழு, யாழ்.ஆஸ்பத்திரியில் நோயாளர்களிடம் இருந்து இரத்தமாதிரிகளை ஆய்வுக்காக எடுத்துச்சென்றிருந்தது. அவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வுகளின் பெறுபேறுகள் அடங்கிய அறிக்கையை டாக்டர் டியூலா டி சில்வா இங்கு எடுத்து வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இரத்த மாதிரியின் பூர்வாங்க பரிசோதனைகள். குடாநாட்டில் டெங்கு பரவி இருப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சின்போது ஹக்கீம்மீது பாலசிங்கம் பாய்ச்சல்!

நொக்கம்பத்தொம்,ஜன.8

நேற்று தாய்லாந்தில் நொக்கம்பத்தொம் நகரில் அரசு - புலிகள் இடையேயான நான்காவது சுற்று சமாதானப் பேச்சுக்களின் இரண்டாம் நாளின் காலை அமர்வுகளின்போது அரசுத்தரப்பு பிரதிநிதிகள் குழுவைச்சேர்ந்த அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு புலிகளின் பேச்சுக்குழுத்தலைவர் அன்ரன் பாலசிங்கம் கடும்தொனியில் பதிலடி கொடுத்தார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஆராயப்படும் விடயங்கள் தொடர்பான பிரதிநிதிகள் குழுவிலும் ஏனைய அம்சங்களிலும் முஸ்லிம்களுக்கு அதிக பங்களிப்பு வழங்கப்படவேண்டும் என்று அமைச்சர் ஹக்கீமும் அவருக்கு வள ஆலோசகராக வந்திருந்த ஹிஸ்புல்லாவும் தொடர்ந்து வலியுறுத்திவந்தனர். அவர்களது தொடர் வலியுறுத்தல்களை பொறுக்க முடியாது அன்ரன் பாலசிங்கம் ஒரு கட்டத்தில் வெடித்தார்.

" நீங்கள் இங்கு முஸ்லிம் தரப்பு பிரதிநிதியாக வரவில்லை. அரசுத் தரப்பு பிரதிநிதியாகவே வந்திருக்கின்றீர். முஸ்லிம்களின் பிரதிநிதி நீங்கள் தானா என்பது இப்போது சர்ச்சைக்குள்ளாக்கியிருக்கின்றது. உங்களது

(16ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் பூரண ஹர்த்தால்

வாழைச்சேனை,ஜன.8

ஓட்டமாவடியில் கடந்த சனிக்கிழமை ஓட்டோ சாரதி ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று வாழைச்சேனை, கல்குடா, ஓட்டமாவடி பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை.

வாழைச்சேனை நீதிமன்றத்திற்கு முன்னாலுள்ள வீதி, ஓட்டமாவடி பாலம் என்பவற்றில் தடைகள் போடப்பட்டு மறிக்கப்பட்டிருந்தன. இதனால் வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது.

கடைகள், வங்கிகள், அரச அலுவலகங்கள் பூட்டப்பட்டிருந்தன. பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை. மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாகக் காணப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக பதற்ற நிலை காணப்பட்டது. விரும்பத்தகாத சம்பவங்கள் எதுவும் இடம்பெறாதிருப்பதற்காக பாதுகாப்புப் படைகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

முஸ்லிம் மக்கள் எழுச்சி முன்னணியால் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. (ஐ-12)

## நேற்று யாழ்நகரப் பகுதியில் மலத்தியோன் புகையூட்டல்!

### நுளம்பு ஒழிப்புப் பணி தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்நகரப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நுளம்பு ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. நவீன தொழில்நுட்ப முறை மூலம் மலத்தியோன் விசுறும் பணியை (Technical Malathi one) மலேரியா தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டனர்.

மலத்தியோன் புகையூட்டும் நடவடிக்கை பற்றி நகரப் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் ஒலிபெருக்கி வாகனம் மூலம் அறிவிக்கப்பட்டது. புகையூட்டும் பணி இடம்பெறும் நேரத்தில் வீடுகள், கடைகளின் கதவுகள், ஜன்னல்களைத் திறந்துவைக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையில் 'ரெக்னிக்கல் மலத்தியோன்' என்ற வகை மருந்து பயன்படுத்தப்படுவதாக மலேரியா தடுப்புப் பிரிவு பொறுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி க.சிவபாதம் தெரிவித்தார்.

இந்த வகை மலத்தியோன், மண்ணெண்ணையுடன் கலக்கப்பட்டு இயந்திரக்கருவியில் இட்டு ஆவியாக்கப்பட்டு புகை வடிவில் விசிறப்படுகிறது.

இந்த முறையிலான மருந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் பாரவூர்தி சங்கத்தினர் இன்று மறியற் போர்!

வடமராட்சி,ஜன.8

பருத்தித்துறை இறங்கு துறையில் கப்பலில் இருந்து இறக்கப்படும் சிமெந்தை ஏற்றிவருவதற்கு தனியார் லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதை ஆட்சேபித்து யாழ்மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் இன்று பருத்தித்துறையில் மறியல் போராட்டத்தினை நடத்தவிருக்கின்றது.

இந்தப் போராட்டத்துக்கு துறைமுக ஊழியர்களும் ஆதரவு வழங்க முடிவுசெய்துள்ளனர்.

கப்பலில் இறக்கப்படும் சிமெந்தினை இதுவரை காலமும் யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கமே அதன் லொறிகள் மூலம் எடுத்துச்சென்று விநியோகித்து வந்தது. நேற்றுமுதல் தனியார் துறை வர்த்தகர்களின் லொறிகள் இப்பணியில் ஈடுபட அனுமதிக்கப்பட்டன. இதனை ஆட்சேபித்து பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



வலி.வடக்கு பிரதேசசெயலகம் முன்பாக நடத்தப்பட்டுவரும் மறியற்போரின் இரண்டாவது நாளான நேற்று எடுக்கப்பட்ட படங்கள். மறியற்போரில் ஈடுபட்டிருக்கும் மக்களை முதல் இரு படங்களிலும், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மக்களுடன் உரையாடுவதை அடுத்துள்ள படத்திலும் காண்கிறீர்கள்.

(படங்கள்:- தேவராஜன்)

### பாதுகாப்பு வலயம்; மீள்குடியமர்வு தொடர்பான

# இராணுவத் தளபதியின் நிலைப்பாட்டிலிருந்து அரசுத் தரப்பு தன்னை விலக்கிக்கொண்டுள்ளது

## நேற்றைய பேச்சுக்களின் பெறுபேறுகள் பற்றி அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

நொக்கம்பத்தொம்,ஜன.8

நேற்று இரண்டாம் நாள் பேச்சுக்களின் முடிவில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் அவற்றில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துதல் ஆகியவை தொடர்பாக இன்றைய (செவ்வாய்க்கிழமை) பேச்சுகளில் விரிவாக ஆராய்ந்தோம்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை அங்கு மீளக்குடியமர்த்துவதையும் புலிகளின் ஆயுதக் களைவு மற்றும் கனரக ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்தல் ஆகியவற்றையும் நிபந்தனைகளாகத் தொடர்புபடுத்தும் யாழ்மாவட்ட இராணுவத்தளபதி மற்றும் இலங்கை இராணுவத் தளபதி ஆகியோரின் முயற்சிக்கு நாம் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்தோம். இது ஏற்க முடியாதது; நடைமுறைச்சாத்தியமற்றது என்பதை அரசுக்குத் தெரியப்படுத்தினோம்.

கடந்த இருபது வருடங்களாக ஆயுதம் ஏந்திப் போராடி வரும் விடுதலைப் புலிகள் அமைப்பு, மரபுவழி இராணுவத்தை ஒத்த பெரும் இராணுவக் கட்டமைப்பைக் கொண்டது என்பது யாவருக்கும் தெரிந்ததே.

இப்போதுதான் நாம் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறோம். பேச்சு மூலம் நிலையான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு முன்னர், தமது தாயகத்தில் எமது மக்கள் மீளக்குடியமரும் மனிதாபிமான நடவடிக்கைக்காக அந்த ஆயுதங்களை ஒப்படைக்கும்படி நிபந்தனை விதிப்பது நீதியற்றது; ஏற்றுக்கொள்ளமுடியாதது; யதார்த்தத்தில் சாத்தியமற்றது.


எமது அந்த நிலைப்பாட்டை அரசு ஏற்றுக்கொண்டது. அது நிபந்தனை என்பதிலும் பார்க்க இராணுவ ரீதியிலான ஓர் உத்தியே என்பதை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இது விடயத்தில் இராணுவத் தளபதியின் நிலைப்பாட்டிலிருந்து அரசுத் தரப்பு தன்னை விலக்கிக் கொண்டுள்ளது.

அதுமட்டுமல்ல, மக்களின் மீள்குடியர்வு மிக இக்கட்டான அவசியமான - அவசரமான - விடயம் என்பதையும அதற்கு நிபந்தனைகள் விதிக்கப்படக் கூடாது என்பதையும் அரசுத் தரப்பு ஏற்றுள்ளது. அப்படி நிபந்தனைகளை விதிக்கக் கோருவது தவறு என்பதையும் அரசுத் தரப்பு முற்றாக உணர்ந்து கொண்டது.

ஆயுதங்களைப் பொறுத்தவரை அவை எமது மக்களின் பாதுகாப்புக் கருவிகள். அவற்றுக்குச் சொந்தமானவர்கள் எமது மக்களே. அவர்களிடமிருந்துதான் நாம் அவற்றைப் பெறுகின்றோம். நாங்கள் இந்த ஆயுதங்களின் உரிமையாளர்கள் அல்லர். பாவனையாளர்கள் மட்டுமே. தேவையான நேரத்தில் ஆயுதங்களைப் பாவித்து விட்டு நாம் வைத்துவிடுவோம்.

எமது மக்கள் எப்போது ஆயுதங்களைக் களையச் சொல்கிறார்களோ அப்போதுதான் நாம் அவற்றை வைப்போம். அது மக்களின் விருப்பத்தைப் பொறுத்தது. இன்றைய பேச்சின் போது அதனை அரசுத் தரப்புக்கு விளக்கினோம்.

ஆயுதப் பிரச்சினையை எடுக்காதீர்கள். அது குறித்துப் பேச்சுக்கே இடமில்லை. அது தமிழினத்தின் பாதுகாப்புச் சக்தி. எமது மக்களின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பேணும ஒரு தீர்வு வந்து, அது நிலைநாட்டப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரே அது குறித்து சிந்திக்க முடியும். எமது மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதற்கு அது தேவை. தீர்வு வர முன்னரே ஆயுதங்களைக் கையளிக்கமுடியுமா? தீர்வு வந்த பிறகு கூட பாதுகாப்புப் பிரச்சினை என்று ஒன்று உள்ளது. எனவே, அதற்குப் பின்னரும் உரிய பாதுகாப்பு



ஒழுங்குகள் செய்யப்பட்ட பின்னரே ஆயுதங்களை வைக்க முடியும் என்பதை நாம் அரசுத் தரப்புக்கு விளக்கியிருக்கிறோம்.

எமது மக்கள் தங்கள் பாரம்பரியத தாயகப் பூமியில் உள்ள தங்களது வீடுகளுக்கு, நிலங்களுக்குத் திரும்புவதற்கு நிபந்தனை ஏதுமற்ற உரிமையுடையவர்கள்.

தமிழர் தாயகப் பிரதேசமான யாழ். குடாநாட்டில் அளவுக்கு அதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவம் காரணமாக, சுமார் பத்து லட்சம் மக்கள் அங்கு தங்கள் சொந்த இடங்களுக்குத திரும்ப முடியாமல் அகதிமுகாம்களில் அல்லற்படுகின்றனர்.

குடாநாட்டுக்குச் சென்ற பல இராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள், வெளிநாட்டவர்கள் அங்கு பரந்த அளவில் - பெருத்த எடுப்பில் - இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

ஆகவே, அரசுத் தரப்பு முதலில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள - படை ஆக்கிரமித்துள்ள வீடுகளில் இருந்து - இராணுவத்தை வெளியேற்றி அவற்றை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு இணங்கியிருக்கின்றது. இது முதற்கட்ட நடவடிக்கை.

யாழ்நகரிலும் - மையத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் இருந்து படைகளை மாற்றியமைத்து - இயல்புநிலையைத் திரும்பச் செய்வதற்கு அரசுத்தரப்பு இணங்கியுள்ளது.

இரண்டாவது கட்டமாக உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ நிலைகளை எவ்வாறு மாற்றி அமைத்து - இடமாற்றி - எமது மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடியதான வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பது குறித்து, சர்வதேச இராணுவ நிபுணர்களின் ஆலோசனையைப் பெற அரசு முன்வந்துள்ளது. இதுதான் இன்று நாங்கள் இரு தரப்பும் இணங்கிச் செய்து கொண்ட ஏற்பாடு.

இந்த விடயத்தில் அரசு விரைவாகச் செயற்பட்டு எங்களுக்கு ஒரு தீர்வைத் தரவேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக நாங்கள் விடுத்த கோரிக்கைகளை - வலியுறுத்தல்களை - நியாயப்பாடுகளை - ஏற்று அதனடிப்படையில் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வந்திருக்கின்றது. இந்த விடயத்தில் இராணுவம் விதித்த நிபந்தனைகள் நீதியற்றது; பொருத்தமற்றது எனபதைச் சுட்டிக்காட்டி கடுமையான நிலைப்பாட்டை எடுத்து, நாம் தீவிரமாகச் செயற்பட்டோம். அதனால் இராணுவ நிபந்தனைகளை நிராகரித்து எமது கோரிக்கைக்கு அமைவாக மக்கள் மீள்குடியமர்வுக்கு மாற்று வழியை நாடும் நிலைக்கு அரசு இணங்கி வந்துள்ளது. இது எமக்குக் கிடைத்த - எமது கடுமையான நிலைப்பாட்டுக்குக் கிடைத்த - வெற்றி.

*கேள்வி:* ஜனாதிபதி குமாரதுங்கவின் கட்டுப்பாட்டில் இராணுவம் உளளது. இந்த நிலையில் எப்படி உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகின்றீர்கள்?

*பாலா:* பொறுத்திருந்து பார்போம். இது தொடர்பான திட்டத்தை ஜனாதிபதி குமாரதுங்கவும் இராணுவத் தளபதிகளும் எதிர்க்கலாம். இந்த அரசு, இராணுவம் மீது எந்தவித அழுத்தமும் பிரயோகிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

எனவே, உயர்பாதுகாப்பு வலய விடயத்திலும் எட்டப்படும் தீர்வுத் திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகாவும் தளபதிகளும் எதிர்த்தால் அதை நடைமுறைப்படுத்த முடியாது என்பது யதார்த்த உண்மை. இந்த நிலையில்

(15ஆம் பக்கம் பார்க்க)

## உபகுழு கலைப்பா? மறுக்கிறார் பீரிஸ்

நொக்கம்பத்தோம்,ஜன.8

"மோதல் தணிவு தொடர்பான உப குழு செயற்படுவதில்லை என்ற முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை"

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

அரசுத் தரப்புக்கும் புலிகள் தரப்புக்கும் இடையிலான நான்காவது சுற்றுப் பேச்சுக்களின் இரண்டாம் நாளான நேற்று, மாலை அமர்வின் பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*கேள்வி:* மோதல் தணிவு தொடர்பான உபகுழு இம்மாத இறுதியில் கூடுமா?

பீரிஸ்: மோதல் தணிவு உபகுழு கூடுவதில்லை என்ற முடிவு ஏதும் இல்லை. தங்[illegible] பணியைத் தொடர்வது தொ[illegible] சில அறிக்கைகளை, விடயங்களை அந்த உப குழு எதிர்பார்த்திருக்கின்றது. அது கிடைத்ததும் அக்குழு [illegible] கூட்டத்தை நடத்தும்.

*கேள்வி:* இந்த உபகுழுவின் தேவை இப்போது இல்லாமல் போய்விட்டதா? (Irrelevant)

*பீரிஸ்:* அப்படியில்லை அது தொடர்ந்தும் தேவைப்படுகின்றது. பேச்சு நடத்தும் பிரதான குழு எல்லா விடயங்களையும் கையாள முடியாது. அகன்ற, விசாலமான விவகாரங்களில் அது முடிவுகளை எடுத்துக் கையாளலாம்.

இந்த உபகுழுவை மாற்றுவதற்கோ அதற்கு புதிதாக வேறு அமைப்பை நிறுவுவதற்கோ தேவை எதுவும் ஏற்படவில்லை. - என்றார் பீரிஸ்.

# அவசர மனிதாபிமான புனர்வாழ்வு குழுவை துரிதமாக இயங்க வைப்பதற்கு முயற்சிகள்

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களின்போது உருவாக்கப்பட்ட அவசர மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் செயற்பாடுகளை தங்குதடையின்றி துரிதமாக முன்னெடுப்பதற்குத் தேவையான ஆரம்ப ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

தாய்லாந்தின் நொக்கம்பத்தோம் நகரில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களின் நான்காவது சுற்று அமர்வுகளுக்கு இடையிலேயே இந்தப் பணியில், சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

கிளிநொச்சியில் தலைமையகத்தைக் கொண்டு இந்த உபகுழு இயங்குகின்றது.

"இந்த உபகுழுவின் செயற்பாடுகள் துரிதகதியில் இல்லை. மந்தமாக உள்ளன. பல நிர்வாகத் தடைகள் உள்ளன. நிதி உதவிகள் எதிர்பார்த்த வேகத்தில் வந்து கிடைக்கவில்லை. செயல் கஷ்டங்கள் பல உள்ளன."

இப்படி பேச்சுக்களின்போது புலிகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தச் சிக்கல் பற்றி ஆராய்வதை ஒத்திப்போடாமல் உடனடியாகவே இரு தரப்பும் நேருக்குநேர் அமர்ந்திருந்து இந்தத் தடைகள், சிக்கல்களை களைந்து, உபகுழுவையும் அதன் தலைமைச் செயலகத்தையும் துரிதமாக இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பது என்று நேற்று இரண்டாம் நாள் பேச்சுக்களின் காலை அமர்வின்போது தீர்மானிக்கப்பட்டது. பேச்சு நேரத்தை, இந்த நிர்வாகச் சிக்கல்களை அடையாளம் கண்டு அவற்றை களைவதற்கான வழிவகைகளை முடிவு செய்வதற்குச் செலவிடக்காமல், வேறு நேரத்தில் இந்தப் பணியை மேற்கொள்வது எனவும் முடிவுசெய்யப்பட்டது.

எனவே, இந்தப் பணிக்காக குறிப்பிடப்பட்ட இருதரப்புப் பிரதிநிதிகளும் நேற்று இரண்டாம் நாள் பேச்சுக்களின் காலை அமர்வுக்கும் பிற்பகல் அமர்வுக்கும் இடைப்பட்ட நேரத்தில் - மதிய இடைவேளைக்குச் செல்லாமல் - இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.

பேச்சு நடைபெறும் 'றோஸ் கார்டின் றிசோர்ட்டில்' அரசுத் தரப்புப் பிரதிநிதியான பேர்னாட் குணதிலகவின் அறையில் கூடியிருந்து இப்பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அரசுத் தரப்பில் பேர்னார்ட் குணதிலக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோரும் புலிகளின் தரப்பில் புலிகளின் சர்வதேச பொருளாதார ஆலோசகரும் பேச்சுக்களில் புலிகளின் வள ஆலோசகராகப் பங்குபற்றுபவருமான ஜோய் மகேஸ்வரன், புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் நாயகம் புலித்தேவன் ஆகியோரும் இப்பணியில் நேற்று மதியம் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் எடுக்கும் முடிவுகள் பேச்சுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். உபகுழுவும் அதன் செயலகமும் திருப்தியளிக்கும் விதத்தில் துரிதமாகச் செயற்படும் ஏற்பாடுகளை இந்தப் பேச்சுக்களில் இந்தத் தடவையோடு செய்து முடிப்பதில் புலிகள் சிரத்தையாக இருப்பதாகத் தெரிகிறது. (ஜ-12)

# ஈழ விடுதலையைப் பெற்றுத்தரக் கூடிய ராணுவ பலம் அரசியல் ஆளுமை விடுதலைப் புலிகளுக்கே இருக்கிறது

## 'கவிக்கோ' அப்துல் ரகுமான் உதயனுக்குப் பேட்டி

யாழ்ப்பாணம்,ஜன.8


விடுதலைப் புலிகள் இல்லாமல் ஈழவிடுதலை என்பது சாத்தியமில்லை. ஈழத்தமிழர்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய இராணுவ பலம் மற்றும் அரசியல் ஆளுமை அவர்களிடம்தான் உள்ளன.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழகத்திலிருந்து யாழ்.வருகை தந்திருக்கும் தமிழறிஞர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான். நேற்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வைத்து 'உதயன்' செய்தியாளருக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்கு முதன்முதலாக விஜயம் மேற்கொண்டுள்ள அவரிடம், ஈழவிடுதலைப் போராட்டம், ஈழவிடுதலைப் போராட்டம் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு, ஈழத்தமிழரின் கலை கலாசார பண்பாடுகள் தொடர்பாக அவரிடம் 'உதயன்' செய்தியாளர் கலந்துரையாடினார்.

அப்போது கவிக்கோ கூறியதாவது:-

யுத்தத்தின் கோர வடுக்களால் இங்குள்ள ஆலயங்கள் மற்றும் பொது மக்களின் இல்லிடங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. இவற்றைக் கண்டு நான் வேதனையடைகின்றேன். ஈழ விடுதலைக்காக இங்குள்ள மக்கள் சந்தித்த இழப்புக்கள் சொல்லில் அடங்காதவை என்பது எனக்குப் புரிகிறது. வேற்று நாட்டவன் ஆகிய நானே இவற்றைக்கண்டு மனவேதனை அடைகின்றேன் என்றால் இங்குள்ள மக்கள் இவற்றை எவ்வாறு தாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இனத்தின் உரிமைகள் பறிக்கப்படும்போது அதனை மீளப்பெறுவதற்கு அவ்வினம் போராடித்தான் ஆகவேண்டும். ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டமும் அப்படியானதொன்றே. தமது உரிமைகள், பாரம்பரியங்கள், பண்பாடு என்பவற்றை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டும் என்பதற்காக இங்குள்ள ஒவ்வொரு ஈழத்தமிழனும் உணர்வுடன் செயற்பட்டு வருகின்றான். இந்நிலை தமிழ்நாட்டுத் தமிழனுக்கு ஏற்படுமாயின் அவன் இவ்வாறு உணர்வுடன் செயற்படுவானா என்பது சந்தேகமே.



தமிழ்நாட்டில் இப்போது விடுதலைப் புலிகளை மட்டும் ஆதரிப்பவர்கள் இருக்கின்றார்கள். ஈழவிடுதலைப் போராட்டத்தை மட்டும் ஆதரிப்பவர்கள் இருக்கிறார்கள். ஈழவிடுதலையை ஆதரித்து புலிகளை எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் புலிகள் இல்லாமல் ஈழவிடுதலை என்பது சாத்தியமில்லை.

விடுதலைப் புலிகள் செய்யாத பலவற்றைக்கூட அவர்கள்தான் செய்தார்கள் என்று சில இந்திய தேசியப் பத்திரிகைகள் கடுமையான பிரசாரத்தை மேற்கொண்டன. இதனால் புலிகள் மீதான வெறுப்புணர்வு அங்கு தூண்டப்பட்டது.

ஈழவிடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது என்பது புலிகளை ஆதரிப்பது என்றநிலை இப்போது தமிழ்நாட்டில் உள்ளது. இதனால் அங்கு வெளிப்படையாக எதுவும் செய்யமுடியாத நிலை உள்ளது. பாரதீய ஜனதாக்கட்சி உண்மையிலேயே ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அது எதிராக உள்ளது. இதற்குக் காரணம், இங்குள்ள தமிழர்களின் விடுதலை உணர்வு, தமிழ்நாட்டுக்கும் பரவி, தனது செல்வாக்கை குறைத்து விடுமோ என்று அக்கட்சி அஞ்சுவதுதான்.

தமிழையும் தமிழ் பண்பாட்டையும் தமிழ்நாட்டுத் தமிழனினால் காக்க முடியாது. ஈழத்தமிழனினால்தான் காக்கமுடியும். தமிழ்நாட்டுத் தமிழன், கொஞ்சம் கொஞ்சமாகத் தனது மொழியையும் பண்பாட்டையும் இழந்துகொண்டிருக்கின்றான். - என்றார் கவிக்கோ. (ஐ-8)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.8

காவலூர் இராசதுரை எழுதிய 'விளம்பரத்துறை' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை வியாழககிழமை மாலை 3மணிக்கு யாழ்.பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், வெளியீட்டுரையை முகாமைத்துவ வணிகபீடாதிபதி மா.நடராஜசுந்தரமும், ஆய்வுரையை அரசறிவியல் சமூகவியல் துறைத்தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கமும் நிகழ்த்துவர். (ஐ-8)

### தொலைக்கல்வி வகுப்பு

வலி.வடக்கு,ஜன.8

வலிகாமம் பிரிவு பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான தொலைக்கல்வி வகுப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்புறம் உள்ள இந்து வாலிபர் சங்கக் கட்டடத்தில் இடம்பெறும் என்று வலி. வடகது பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் அறிவித்துள்ளார்.

தொலைக்கல்வி வகுப்பில் கலந்துகொள்ளும் அனைத்து உத்தியோகத்தர்களையும் உரியநேரத்தில் வகுப்பில் கலநந்துகொள்ளும்படி அவர் கேட்டிருக்கிறார். (ஐ-86)

### உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு அப்பால்

# வெளிப் பிரதேசங்களில் முதலில் குடியமர்வுக்கு கால அட்டவணை

### தயாராகிறது என்கிறார் ஜி.எல்.பீரிஸ்

நொக்கம்பத்தொம்,ஜன.8

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உள்ள பிரதேசங்களில மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை ஒருகால அட்டவணையின் அடிப்படையில் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தக் கால அட்டவணையைத் தயாரிக்கும் பணி தற்போது நடக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் அரசப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

நேற்று தாய்லாந்தில் நொக்கம்பத்தொம் நகரில் அரசு - புலிகள் இடையேயான நான்காவது சுற்று அமைதிப் பேச்சுக்களின் இரண்டாம நாள் காலை அமர்வுகளின் பின்னர் செய்தியாளர்களுக்கு தகவல் வெளியிடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் விலகவேண்டும் என்று புலிகள் எப்போதும் கோரவில்லை. மீளக்குடியேற்றத்துக்கான கால அட்டவணை, அதற்கான வள ஏற்பாடுகள் ஆகிய விடயங்களே காலைப் பேச்சுக்களில் இரு தரப்புப் பிரதிநிதிகள் மத்தியிலும் முக்கியமாக முன்வைக்கப்பட்டன.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் மீளக்குடியேற வேண்டியவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் மீளக்குடியேற வேண்டிய மக்களின் எண்ணிக்கை அதிகம்.

எனவே, அதிக எண்ணிக்கையான மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைத் தரக் கூடியதும் - இலகுவாகத் தீர்க்கக் கூடிய - பிரச்சினை குறித்து முதலில கவனம் எடுத்து அதனைத் தீர்த்துவைப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கள் மீளக்குடியமர்த்தும் விவகாரம் சிக்கலானது. அதை தீர்ப்பதில் கஷ்டங்கள் உள்ளன எனவே, இலகுவாகக் தீர்க்கக்கூடிய விடயத்தை உடனடியாக கையாள முடிவு செய்துள்ளோம்.

- இவ்வாறு மக்கள் இப்பிரதேசத்தில் குடியமர்வதற்கு முதலில் அப்பிரதேசங்கள் பாதுகாப்பானவையாக இருக்கவேண்டும். அதற்கு கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டும் இப்பகுதிகளில் மக்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள், மருத்துவப் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இத்தகைய பிரதேசங்களில் வெள்ளம் தேங்கும் நெருக்கடியும் உள்ளது. தொற்றுநோய் பரவும் ஆபத்துக்கள், சுகாதார சீர்கேடு போன்ற சிக்கல்களுக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

இத்தகைய சவால்களைச் சமாளித்து, மக்களை இப்பிரதேசங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டி உள்ளது.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் மீளக்குடியமர வேண்டிய மக்களின் பிரச்சினை சிக்கல் மிக்கது என்பதால் அது குறித்துப் பின்னர் ஆலோசிக்கப்படும் என்றார் அமைச்சர் பீரிஸ். (ஐ)

### மிருசுவிலில் வீடுகள் கையளிப்பு

தென்மராட்சி,ஜன.8

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் படையினர் நிலைகொண்டிருந்த 32வீடுகள் இன்று அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இப்பகுதியில் உள்ள 190 வீடுகளில் 32 வீடுகள் தவிர்ந்த ஏனைய இருப்பிடங்கள் கடந்த நவம்பர் மாதம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 32வீடுகளில் படையினர் தொடர்ந்து தங்கியிருந்தனர். கடந்த வாரம் தொடக்கம் இந்த வீடுகளில் இருந்த தமது பொருள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளதாக அந்தப்பகுதி கிராம அலுவலருக்கு அறிவித்துள்ளனர். (ஐ-117)

### கூட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கு இன்று ஏற்பாடாகியிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

# வலி.வடக்கு மறியற்போர் 2ஆவது நாளாக நீடிப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.8

வலி.வடக்கில் தம்மை மீளக் குடியமர்த்துமாறு கோரி தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் மக்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை பிரதேச செலகத்தின் வாயில்களுக்கு முன்னால் அமர்ந்து பிரதேச செயலகத்தை திறககவிடாது பொதுமக்கள் மறியலில் ஈடுபட்டனர். சிறிது நேரத்தில அங்குவந்த பொலீஸார் போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறும், பிரதேச செயலகத்தை திறப்பதற்கு உதவுமாறும் கேட்டுக் கொண்டனர்.

பொதுமக்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே பொலீஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கடும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. எனினும், மக்கள் தொடர்ந்தும் மறியல்போரில் ஈடுபட்டனர்.

'பிரதேச செயலரோ, பணியாளர்களோ எவரும் நேற்று பிரதேச செயலகத்துக்குள் பிரவேசிக்கவில்லை.

பின்னர் அவ்விடத்துக்கு வருகை தந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் போராட்டக்காரர்களுடன் உரையாடினார் இப்பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இன்றும் மறியற்போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (ஐ-8-3ம்)

### காணாமற்போனோர் விவகாரம்:

# பிரதமரின் செயலரை இன்று பெற்றோர்கள் சந்திக்கின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.8

படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோரின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் அடங்கிய குழுவினர், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனுடன் இன்று கொழும்பில் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

யாழ் அரச அதிபரின் ஏற்பாட்டில் பிரதமரின் அலுவலகத்தில் இன்று நடைபெறவுள்ள இப்பேச்சில் கலந்துகொள்வதற்காக பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் அடங்கிய 10 பேர் கொண்ட குழுவினர் நேற்றுக்காலை இங்கிருந்து கொழும்பு புறப்பட்டுச் சென்றனர்.

இக்குழுவினருடன் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், செயலகத்தின் பிரதம எழுதுவினைஞர் ரி.கதிர்காமநாதன் ஆகியோரும் கொழும்பு சென்றுள்ளனர்.

இன்றைய பேச்சுக்களில் பிரட்மன் வீரக்கோனுடன் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கே.ஜெயரட்ணமும் கலந்துகொள்வுள்ளார். (ஐ-10)

# மகளிர் விவகாரங்களுக்கு உபகுழு நியமிக்க முடிவு

### அரசுக் குழு தலைவர் ஜி.எல்.பீரிஸ்

நொக்கம்பத்தொம்,ஜன.8

மகளிர் விவகாரங்கள் பற்றிய விடயங்களை கையாள்வதற்கு அரசும் புலிகளும் இணைந்து மகளிர் உப குழு ஒன்றை அமைக்க முடிவு செய்திருக்கின்றனர்.

நேற்று இரண்டாம் நாள் பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிட்ட சமயம் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

இரண்டாம் நாள் மாலைப்பேச்சுக்களின் போது அடிப்படை மனித உரிமை விவகாரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் குறித்தும் அலசப்பட்டது. இந்த விடயங்களைக் கவனிப்பதற்காக - பேச்சு குழுவிற்கு உதவியாக - உப குழு ஒன்றை அமைக்கவும் முடிவுசெய்யப்பட்டது.

முன்னர் அமைக்கப்பட்ட உப குழுக்கள் போன்றே இக்குழுவும் செயற்படும். அநேகமாக அரசு தரப்பில் நான்கு மகளிரும் புலிகள் தரப்பில் நான்கு மகளிரும் இக்குழுவில் இடம்பெறுவர். இக்குழுவின் அமைப்பில் இடம்பெறும் அங்கத்தவர்கள் குறித்து இந்த நான்காவது சுற்று பேச்சுக்கு முன்னர் தீர்மானிக்கப்படும்.

அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான விடயத்தின் போது பொலீஸார், அவர்களின் செயற்பாடுகள், பொலீஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் ஆகியவை குறித்தும் விரிவாகப் பேசப்பட்டது.

☆கேள்வி:- புலிகளின் பொலீஸார், பொலீஸ் நிலையங்கள் குறித்தும் பேசப்பட்டதா?

☆பீரிஸ்:- ஆம், மனித உரிமை விடயங்கள் அனைவருக்கும் பொதுவானவை எனவே, இருதரப்பு பொலீஸார், பொலீஸ் நிலையங்கள் தொடர்பான மனித உரிமைகள் குறித்தும் விரிவாகப்பேசப்பட்டது. (ஐ)

## வெளிவந்துவிட்டது...

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (புதிய பாடத்திட்டம்)

### தரம் 5

வெளியீடு:

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

*அனைத்து புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

(12876)

---

## யா/இமையாணன்
## அரசினர் தமிழ்க் கல்வன் வித்தியாலய
## பழைய மாணவர் சங்க
## பொதுக்கூட்டமும்
## நிர்வாகத்தெரிவும் - 2003

*காலம்:* இன்று (08.01.2003) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி.

*இடம்:* **வித்தியாலய மண்டபம்.**

மேற்படி கூட்டத்தில் சுவிஸ் கிளை அங்கத்தவர்களும் பங்குகொண்டு முக்கிய கருத்துக்களைப் பரிமாறவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகந்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்க
நிர்வாகம்.

(12894)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 12 - 04 - 1922



ஆண்டவன் அடியில் 09 - 12 - 2002

### திருமதி சிவகாமிப்பிள்ளை சுப்பிரமணியம்

*(இளை. ஆசிரியை - மம்மி ரீச்சர்)*

09.12.2002ஆம் திகதி அன்று சிவபதமடைந்த எம் அன்புத் தாயாரின் மரணச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவிபுரிந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அன்பு நெஞ்சங்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (08.01.2003) புதன்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*"சிறீதர பவனம்",*
*குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(12897)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 23 - 06 - 1941



விண்ணகம் 21 - 12 - 2001

### அமரர் பொன்னம்பலம் விஜயரட்ணம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாலைப் பரிசோதகர், கோண்டாவில்)

**திதி: 08.01.2003**

*எம்மையும் எம் குடும்பத்தையும் அன்பு சொரிந்து*
*நல்வழி காட்டி தெய்வமாகிவிட்ட எம் குடும்பத் தலைவா!*
*ஓராண்டு அல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*ஆறுமா எம் மனம்? மறக்குமோ எம் இதயம்?*

*உங்கள் ஆத்மா சாந்தி பெற்று அமைதிபெற ஆண்டவனை என்றும் வேண்டுகிறோம்.*

இன்று (08.01.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன வைபவத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

மனைவி, மக்கள்.

(12777)

---

உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகோட்)

# கேள்வி கோரல் இல.12

## பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (**NECORD**) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து நன்கொடை ஒன்றிற்கு இலங்கை அரசாங்கம் விண்ணப்பித்துள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்நன்கொடையின் ஒருபகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் **NECORD**, கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின்கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இல. | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலை பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01. | முல்/நீகோட்/நெஅ/ஈடி/01 | 1500/= | 110,000/= |
| 02. | கிளி/நீகோட்/நெஅ/ஈடி/01 | 1500/= | 110,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்விகள் கோருவதற்குத் தகுதிவாய்ந்தவர்களாவார்கள்.
   - i கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தத்தை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்விகோருபவர் திருப்திகரமாக முடித்திருக்கவேண்டும். போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் ஒரு தச்சுவேலை அல்லது வில் காய்ச்சியோட்டுதல் வேலைத்தளத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளராக இருக்கவேண்டும் என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கான சான்றிதழைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர்கள் வேண்டப்படுகின்றனர்.
   - ii ஒப்பந்தத்தைக் கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிரூபிப்பதற்கு கேள்விதாரருக்கு இயலுமானதாக இருக்க வேண்டும். இதற்கு மாற்றீடாக, கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன்கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையில் உள்ள மதிப்புவாய்ந்த வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம் பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படவேண்டும். இத்தகைய கடன் சான்றானது திட்டப்பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்கவேண்டும் என்பதுடன், கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியேகமாக இக்கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.
   - iii மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக்கூடாது.

4. மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு கேள்வியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு கேள்வி கோரலாம். ஆனால், இத்திட்டத்தின்கீழ் பாடசாலைத் தளபாடங்களை வழங்குவதற்கு நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட இரண்டு ஒப்பந்தத்திற்குக் கூடுதலான ஒப்பந்தத்தைப் பெறத் தகுதியற்றவராவார்.

5. ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப் படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை *வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை* என்ற விலாசத்திலுள்ள திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல.: 026-27434, தொலைநகல்: 026 27401, மின்னஞ்சல்: necord@sltnet.lk.

6. கேள்வி ஆவணங்களை 2003 ஜனவரி 09ஆம் திகதியிலிருந்து 2003 ஜனவரி 23ஆம் திகதி வரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00மணிவரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்துகொள்ளலாம்.

7. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் IIஇல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில் இது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

8. கேள்வி சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பதாக கேள்வி சம்பந்தப்பட்ட விளக்கமளித்தல் கூட்டமொன்று பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் ஜனவரி 20ஆம் திகதி அன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

9. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் *தலைவர், கருத்திட்ட கேள்விச் சபை NECORD 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை* என்று விலாசமிடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப்பணம் அடங்கலாக 2003 ஜனவரி 29ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பதாக கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். இதன்பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

11. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகளை தகுதிவாய்ந்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வைபார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும்.

**த.லங்காநேசன்**
*திட்டப் பணிப்பாளர்,*
*வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்*
*(நிகோட்)*
*140, மின்சார நிலைய வீதி,*
*திருகோணமலை.*

(சி-25854)

## உதயன்

# வடக்கு - கிழக்கு கல்விப் பாரம்பரியம்

தகுதியடிப்படை மற்றும் பிரதேச அடிப்படை ஆகியவற்றுக்குப் புறம்பாக 'இசற்' ஸ்கோர் முறையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்ய முற்பட்டுள்ளதால், நாடெங்கும் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக வடக்கு - கிழக்கு மாணவர்கள் பெரும் பாதிப்புக்கு இலக்காகிவிட்டார்கள். இதற்குப் பரிகாரமாக 'இசற்' ஸ்கோர் முறையைக் கைவிடுவது பற்றி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சிந்தித்து வருகிறது. குழு நல்ல முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது கல்வித்துறை சம்பந்தமான நல்லதொரு செய்தி வந்திருக்கிறது. இரண்டு தசாப்த கால யுத்தத்தால் சிதைந்து, சீரழிந்துபோன வடக்கு - கிழக்கு பாடசாலைகள் அனைத்தும் புனரமைக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக மிகவும் மோசமான நிலையிலுள்ள 96 பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட இருக்கின்றன.

அதற்கு முன்னோடியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சேதமடைந்த பாடசாலைகள் மற்றும் இயங்காதிருக்கும் பாடசாலைகள் ஆகியவற்றின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

கிடைத்த விவரங்களின்படி வடக்கு - கிழக்கில் 165 பாடசாலைகள் முற்றாக அழிந்துவிட்டன. 160 பாடசாலைகளில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கிறார்கள். 321 பாடசாலைகளில் வகுப்புகள் தற்காலிகக் கொட்டில்களிலும் மர நிழலிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கில் ஆசிரியர்கள் பற்றாக்குறையும் நிலவுகிறது. அதுவும் அங்கே கல்வி அபிவிருத்திக்குத் தடையாக இருந்து வருகின்றது. அதனால், வடக்கு - கிழக்குக்கு 1000 தமிழ் ஆசிரியர்களை இந்த ஆண்டில் நியமிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு பாடசாலைகளின் புனரமைப்புக்காக ஆயிரம் கோடி ரூபாவை உலக வங்கி வழங்கவுள்ளது.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகம் உட்பட ஏனைய பிரதேசங்களுக்கு 8 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கும் மற்றும் கல்விப் பணிகளுக்கும் தேவைப்படும் பணத்தில் 3 ஆயிரம் கோடி ரூபாவையும் உலக வங்கி வழங்க இருக்கிறது.

இந்தத் தகவல்களை கல்வி, கலாசார, மனித வள அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்திருக்கிறார்.

'சகல பிள்ளைகளுக்கும் பாடசாலைக் கல்வி' என்ற இயக்கமும் கல்வி அமைச்சும் சிறுவர்களுக்கான யுனிசெவ் நிறுவனமும் இணைந்து கல்வி அபிவிருத்திச் சேவைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளன. அதன் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 9ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

அதுபற்றி பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கையில், அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேற்கண்ட தகவல்களை வெளியிட்டதோடு, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் கல்விப் பாரம்பரியத்தை வியந்து, அதற்குப் பாராட்டும் தெரிவித்தார்.

"என்னும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற கருத்துடையவர்கள் தமிழர்கள். அவர்கள் கல்வியைக் கருந்தனமாகப் பேணி வருகிறார்கள். யுத்த காலத்தில் குண்டுகள் பொழியப்பட்ட போதும் துப்பாக்கிகள் முழங்கியபோதும் கூட அவர்கள் படிப்பை நிறுத்தவில்லை. பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து அகதிகளாக இருந்த நிலையிலும்கூட குப்பி விளக்கிலேனும் படித்து பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இதை நினைவுபடுத்தி புலிகளையும் தட்டிக்கொடுத்தார்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு புலிகள் எச்சந்தர்ப்பத்திலும் இடையூறு ஏற்படுத்தியதில்லை. மாறாக உதவிகளை வழங்கி வருகிறார்கள். அதனாலேயே தமிழினத்தின் கல்வி மேம்பாடடைந்திருக்கிறது. இதை பிற சமூகங்களும் பின்பற்றவேண்டும் என்றார் அமைச்சர்.

அமைச்சரின் புகழுரையில் நனைந்து மயங்கிப் போய்விடாமல், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களும் ஏனையோரும் கல்வி அறிவுத் தேடலில் முன்னரை விட முனைப்பாக ஈடுபடவேண்டும். பாடசாலைகளில் உத்தேசப் புனரமைப்பு, புதிய ஆசிரியர்கள் நியமனம், முக்கூட்டுக் கல்விச் சேவைத்திட்டம் ஆகியவற்றால் நிறை பயனடைய முயற்சிசெய்ய வேண்டும்.

அதற்கிடையில் படையினர் தாம் நிலைகொண்டுள்ள பாடசாலைகளில் இருந்து வெளியேறிவிட வேண்டும்.

# தேசியப் பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியரை இடமாற்றுக!

## பற்றாக்குறையை நீக்க அமைச்சர் பணிப்பு

திருகோணமலை,ஜன.8

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றும் மேலதிக ஆசிரியர்களை, வெற்றிடங்கள் நிலவும் ஏனைய தேசியப் பாடசாலைகளுக்கு உடனடியாக மாற்றம் செய்யும்படி தேசியப் பாடசாலைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு, பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். இவ்வாறான இடமாற்றங்கள் சாத்தியமாகாத சந்தர்ப்பங்களில் மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யும்படி அமைச்சர் பணித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் பல தேசியப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதும் -

இதேவேளை, அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் 72 பேர் கற்பிக்கவேண்டிய நிலையில் 91 ஆசிரியர்கள் பணியாற்றுவதும் - அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து அக்கரைப்பற்றுப் பாடசாலையில் மேலதிகமாக உள்ள 19 ஆசிரியர்களையும் ஒருவார காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும் என்று பணிப்பாளருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (ஒ-290)

# விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக மீனவர் படகுகளில் சமிக்ஞை விளக்கு!

## வடபிராந்திய கடற்படைத் தளபதி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஜன.8

வடக்குக் கடலில் கடற்படையினரின் படகுகளும் மீனவர்களின் படகுகளும் மோதி விபத்துக்குள்ளாகும் சம்பவங்களைத் தவிர்க்க வசதியாக சகல மீன்பிடி வள்ளங்களிலும் சமிக்ஞை விளக்கு வைக்கவேண்டும்.

- இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார் வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் நந்தன துடுவேவத்த.

கடந்த 3ஆம் திகதி புதிய தளபதியாக பதவியேற்றுள்ள அவரை நேற்றுமுன்தினம் அவரது அலுவலகத்தில் 'உதயன்' செய்தியாளர் சந்தித்தார்.

கடற்படையினரின் செயற்பாடுகளை விளக்குவதற்காக இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வடபிராந்திய கடற்படைத் தளபதி அங்கு தெரிவித்ததாவது:-

கடந்த முதலாம் திகதி கடற்படையின் படகு ஒன்று காங்கேசன்துறைக்கு அப்பால் ரோந்து வந்துகொண்டிருந்த சமயம் மீன்பிடிப் படகு ஒன்றுடன் மோதியது. அந்த மீன்பிடிப் படகில் இருந்த மூவரில் இருவரைக் கடற்படையினர் காப்பாற்றி உடனடியாக பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.



அதன்பின்னர், ஆறு கடற்படைப் படகுகள் அந்தப் பகுதியில் காணாமற்போன மீனவரைத் தேடின. அதிகாலைவரை இத்தேடுதல் நடத்தப்பட்டது. மீண்டும் காலையிலும் தேடுதல் தொடர்ந்தது. அப்போது மீனவரின் படகு சேதமான நிலையில் மீட்கப்பட்டது. படகின் எஞ்ஜின் எந்தவித சேதமுமின்றி மீட்கப்பட்டது.

இத்தேடுதலில் மீனவர்களை அனுமதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. கடற்படையின் படகுகள் உயரமானவை. அவற்றின்மூலம் பெரிய பரப்பில் தேடுதல் நடத்தமுடியும். மனிதாபிமான நோக்குடன் எப்படியாவது மீனவரைக் காப்பாற்றிவிடவேண்டும் என்ற நோக்கிலேயே தேடுதல் நடத்தப்பட்டது.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவம் ஏதும் இடம்பெறும் பட்சத்தில், அச்சமயம் மீனவர் சிலரையும் எமது படகுகளில் ஏற்றிச்சென்று தேடும் பணியில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த கப்டன் ஒருவர் தலைமையில் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அக்குழு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளது. மீனவர் படகில் சமிக்ஞை விளக்கு இல்லாததாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக அக்குழு தெரிவித்துள்ளது.

இதையடுத்து சகல மீனவர்களும் சமிக்ஞை விளக்குகளைத் தமது படகுகளில் எடுத்துச்செல்லுமாறு ஆலோசனை வழங்கும்படி யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளோம். இராணுவ அதிகாரிகளுக்கும் இத்தகவலை அறிவித்துள்ளோம்.

மீனவர்கள் சமிக்ஞை விளக்குகளைத் தமது வள்ளங்களில் பொருத்துவதன்மூலம் விபத்துகளைத் தவிர்க்கமுடியும் - என்றார் அவர்.

இதேவேளை - தொண்டைமானாறு கடலில் கடற்படைப் படகும் மீனவர் படகும் மோதிக்கொண்டதில் படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இரு மீனவர்களுக்கும் செலுத்துவதற்கான விலைகூடிய ஊசிமருந்து வகைகளை கடற்படையினர் யாழ். ஆஸ்பத்திரியில் கையளித்துள்ளனர். 12ஆயிரம் ரூபா பெறுமதியான 12 ஊசிமருந்துகள் கையளிக்கப்பட்டுள்ளன.

(ஒ-3-8)

# செய்முறைக்கு பின்னடிப்போரால் 'லைசென்ஸ்' வழங்குவதில் சிக்கல்

## திணைக்கள வட்டாரங்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.8

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த சிலர் தமக்குரிய செயன்முறைப் பரீட்சையை வேறொரு தினத்தில் நடத்துமாறு கோருவதால் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

நடைமுறையில் இல்லாத இதுபோன்ற விடயங்களை வற்புறுத்தி தமக்குரிய தினத்தில் செயன்முறைப் பரீட்சையில் தோற்றாது விடும் சிலரால் ஏனையவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சந்தர்ப்பம் வீணடிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தினத்தில் எழுத்துப் பரீட்சை நடைபெறும். அதில் சித்தியடைந்தவர்களுக்கு அன்றைய தினமே செயன்முறைப் பரீட்சையும் நடைபெறும். ஆனால், சிலர் எழுத்துப் பரீட்சையில் பங்குபற்றிச் சித்தியடைந்தவுடன் செயன்முறைப் பரீட்சைக்கு வேறொரு தினத்தை ஒதுக்கித்தருமாறு கோருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தைக் கூடுதலாகப் பெண்களே கேட்டு வருகின்றனர். ஆயினும், இவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. வழங்கப்பட்ட தினத்திலேயே எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும் இவ்வாறு மேற்படி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-10)

# வேலையிழக்கும் ஊழியருக்கான காப்புறுதித் திட்டம் விரைவில்!

ஏதாவது ஒரு நிறுவனத்தில ஊழியர்களின் சேவை சட்டப்படி முடிவுறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அந்த ஊழியர்களைப் பாதுகாப்பதற்காக பிறநாடுகளில் இருப்பதைப் போனறு 'தொழில் இழந்தோர் காப்புறுதி' திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தொழில், தொழில்வாய்ப்பு அமைச்சு கோரப்பட்டிருக்கிறது. நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

சேவை முடிவுறுத்தப்படும் ஊழியர்களுக்கு சட்டப் பாதுகாப்பு மட்டும் போதுமானதல்ல. அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நஷ்டஈடு மட்டுமன்றி தொழிலிழந்தோர் காப்புறுதி மூலம் நிதி ஆதரவும் வழங்கமுடியும் எனவும் பிரதமர் அங்கு தெரிவித்திருக்கிறார். தொழில், தொழில்வாய்ப்பு அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்விடயம் குறித்து குறிப்பிடுகையில், சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று 'தொழிலிழந்தோர் காப்புறுதி' திட்டம் குறித்து ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருவதாகவும் இம்மாதத்துக்குள் அது பூர்த்தியாகும் எனவும் தெரிவித்தார். (ஒ)

**நாளை**

மார்கழி 25
வியாழக்கிழமை
(09.01.2003)
திதி : ஸப்தமி
முழுவதும்
நட்சத்திரம: உத்தரட்டாதி
பின்னிரவு 1.34 வரை.
சுபநேரம் : 8.02 - 9.32
ராகுகாலம் : 2.02 - 3.32
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

பிடிவாதம் பிடிப்பதால் ஒருவன் மற்றவர்களுக்கு தொல்லையாகிறான்.

கிராம சேவையாளர்களிடமிருந்து

# சனத்தொகை விவரங்களை திரட்டும் பணியில் படையினர்

வலி.வடக்கு,ஜன.8

யாழ்.மாவட்டத்தின் சனத்தொகை சம்பந்தமான விவரங்களை இராணுவத்தினர் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகச் சேகரித்து வருகின்றனர்.

1995ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தை இராணுவம் கைப்பற்றியபோது இருந்த சனத்தொகை மற்றும் தற்போதைய சனத்தொகை உட்பட பல்வேறு விடயங்களையும் கிராம அலுவலர் அலுவலகங்களுக்குச் சென்று படையினர் சேகரித்துவருகின்றனர்.

குறிப்பாக 95ஆம் ஆண்டிலும் பின்னர் தற்போதும் கிராம அலுவலர் பிரிவில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை, வீடுகளின் எண்ணிக்கை, வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை, 12வயதுக்கு உட்பட்டவர்கள், உடைந்த வீடுகள் போன்ற பல்வேறு விவரங்களையும் அவர்கள் சேகரித்து வருகின்றனர்.

தற்போது கிராம அலுவலர் பிரிவில் உள்ள இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் மற்றும் நிரந்தர குடும்பங்களின் விவரம் போன்றவற்றையும் படையினர் பெற்றுச்செல்கின்றனர்.

இந்த நடவடிக்கையில் இராணுவத்தினரும், கடற்படையினரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம அலுவலர்கள் பலரும் தத்தமது பிரிவுகளில் அண்மையிலேயே பணியைப்பொறுப்பேற்றுள்ளனர். அதனால், பழைய புள்ளி விவரங்கள் அவர்களிடம் முழுமையாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது. அத்துடன் பெரும்பாலான படையினருக்கும் கிராம அலுவலர்களுக்கும் இடையே மொழி காரணமாகத் தொடர்பாடல் குழப்பம் நிலவுகிறது.

இத்தகைய நிலைமையில் படையினர் சேகரிக்கும் தகவல்கள் முழுமையானதாக இருக்குமா என்பது குறித்து சந்தேகம் எழுப்பப்படுகிறது. (ஒ-86-73)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
26 - 05 - 1964

உதிர்வு
21 - 12 - 2001

## திருமதி உமாதேவி மோகனதாஸ்

*(ஆசிரியர், யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை)*

*திதி:* 09.01.2003

ஆண்டு ஒன்று ஆயிற்றோ அந்தோ உமைப் பிரிந்து
மாண்டு நீர் போனதால் மனை செயலிழந்து போனதே!
தூண்டாமணி விளக்காய் துலங்கிய உமை நினைத்து
இங்கு தவிக்கின்றோம் நின் முகம் காணாது!

பிரிவால் துயருறும்:
தாய், சகோதரிமார்,
உறவினர்கள்.

*சிவபுர வீதி,*
*வல்வெட்டித்துறை.*
(12909)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
23 - 06 - 1926



அமலன் மடியில்
09 - 12 - 2002

## அமரர் ஞானமுத்து ஜோஜ்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு உடனடியாக வருகைதந்து உதவியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்!

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (08.01.2003) புதன்கிழமை காலை 6.30மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அந்நிகழ்விலும் அன்றைய தினம் இல. 30, சுவாட்ஸ் லேனில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரங்கள்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

இல. 30, சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி.
(12818)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில்
1914 - 07 - 10



புகழுலகில்
2002 - 01 - 08

## அமரர் ஜோண் றொபேட் அல்பேட்

*(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)*

உங்களைப் பிரிந்து நினைவுகளைச் சுமந்து ஓராண்டு கழிந்தது
கனவிலும் நினைவிலும்
நீங்காத உங்கள்
பாசமிகு மக்கள்
இவரும் எம் அப்பா எங்கே!
எங்கே! என்ற ஏக்கம்
எம் அம்மா உங்களை அப்பா எங்கே?
ஏன் போய்விட்டார் என்கிறார்
தரணியில் தன் பணி முடிந்து விட்டதே என
தன் வலது கரத்தில் ஏந்துவதற்கு
யேசுபிரான் அழைத்து விட்டார் என்கிறோம்.
அவரது பிரிவு தாங்காது துயரமடைகின்றோம் - உங்கள்
நினைவுகள் என்றும் எங்களுடன்
சங்கமித்துக்கொண்டே இருக்கும்.

*தகவல்:*
*அ.ஜெயராஜகுலேந்திரன்*
*(மகன் - அதிபர்),*
*'பிரின்ஸ் அகம்'*
*உடுவில், சுன்னாகம்.*
(12900)

*பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிகள்.

# ஹெரோயின் கடத்த முயற்சி!

வவுனியா,ஜன.8

மன்னாரிலிருந்து கொழும்புக்குக் கடத்தப்படவிருந்த 10 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றப்பட்டது.

மன்னாரிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட பயணிகள் பஸ்ஸில் ஹெரோயின் கடத்தப்படுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் பிரிவினர் உயிலங்குளம் பகுதியில் பஸ்ஸை நிறுத்திச் சோதனையிட்டனர். அப்பொழுது 10கிலோ ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டது. ஹெரோயின் வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார். (ஒ)

# கழிவு வடிகால்களை சுத்தப்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.8

குருநகர்ப் பகுதியில் உள்ள கழிவுநீர்க் கால்வாய்கள் பல, நீண்டகாலமாக சுத்தம் செய்யப்படாமல் உள்ளமையினால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர்ப் பகுதியில் உள்ள சென்பற்றிக்ஸ் வீதி, தண்ணீர்த் தாங்கி வீதி, சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதி, ஐஸ்பிளான்ட் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வெள்ள வாய்க்கால்களே நீண்ட நாள்களாக துப்புரவு செய்யப்படாமல் உள்ளன.

இப்பகுதியில் சுத்திகரிப்புப் பணிகள் விரைந்து இடம்பெறாவிட்டால் தொற்றுநோய்கள் விரைவாகப் பரவுவதைக் கட்டுப்படுத்த இயலாது என்று அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (ஒ-9)

# இடி குண்டு கிணற்றினை புனரமைக்கக் கோரிக்கை

வலி.தெற்கு,ஜன.8

மானிப்பாய் மேற்குப் பிரதேசத்திலுள்ள இடிகுண்டு கிணற்றினை புனரமைப்புச் செய்து, அதனைச் சூழவுள்ள மேட்டு நில விவசாயக்காணிகளுக்கு நீர்பாசன வசதி செய்து தருமாறு யாழ்ப்பாணம் கமநல சேவைத்திணைக்கள உதவி ஆணையாளரை மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளத்தினர் கேட்டுள்ளனர்.

கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்மேளனத்தினர் இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த இடிகுண்டு கிணறு மிகப் பழைமை வாய்ந்தது. நிலாவரைப் பகுதியில் உள்ள கிணற்றைப்போல வற்றாத நீரூற்றைக் கொண்டதாக இக்கிணறு காணப்படுகின்றது.

நிலாவரையில் உள்ள நீரூற்றுக்கிணறு ஏற்கனவே புனரமைப்பு செய்யப்பட்டதால் அதனைச் சுற்றியுள்ள விவசாய காணிகளுக்கு வருடம் முழுவதும் நீர்ப்பாசன வசதி கிடைக்கிறது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலமே அப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நீர் விநியோகமும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதேபோல -

இப்பகுதியில் உள்ள இடிகுண்டு கிணற்றையும் விரைவில் புனரமைப்புச் செய்து, நீர்த் தாங்கி அமைத்து, அதன் மூலம் இப்பகுதி விவசாயக் காணிகளுக்கு வருடம் முழுவதும் நீர்ப்பாசனம் செய்யக்கூடியதாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-152)

**T.V. விற்பனைக்கு**

Sony T.V. (Japan) உடன் விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*
முகுந்தன் எலக்ரோணிக் அன் பான்சி
கே.கே.எஸ். வீதி.
சுன்னாகம். (12819)

**தேவை**

சமையல் வேலைக்கு
அனுபவம் உடையவர்
தேவை.

தொடர்பு:
ரிக்கோ ஹோட்டல்
இல.370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(12859)

பொங்கல் திருநாளை முன்னிட்டு அநேக
வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க
விசேட விலைக்கழிவும் மற்றும் மலிவு விற்பனையும்
நவீன பாணியிலான நல்ல ரக துணிவகைகள்,
புடைவைகள், சேட், சூட் வகைகள்
பெற்றுக்கொள்ள

**லைடன் புடைவை நிலையம்**

(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/25805)

# நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



## அமரர் அந்தோனி காணிக்கை

ஜனனம் 1948.04.13
மரணம் 2001.01.08

குடும்பத் தலைவா!
குறைவற்ற நல்லோனே - உந்தன்
மறைவென்ற பெருந்துயரால்
இப்புவியில் மாண்டு மடிகின்றோம்.

*என்றும் உம் நினைவோடு:*
கா.பார்பரம்மா (மனைவி),
பிள்ளைகள்.

*72/5, இராஜசிங்கம் வீதி,*
*திருநகர்,*
*யாழ்ப்பாணம்.*
(12840)

ஓம் ஸ்ரீராம ஜெயம்

# 21ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்
08 - 10 - 1915



மறைவு
19 - 12 - 2002

## திருமதி தையல்முத்து சீனிவாசகம்

08.01.2003


நன்றிகள் பற்பல செய்து வாழ்ந்து
குன்றின் விளக்காக இருந்த உங்களை
அன்றிலிருந்து என்றும் மறவாத இனத்தவர்கள்
இன்று மறவாது நினைவு கூரும் நாள்.

சகோதரர் குடும்பம்,
பெறாமக்கள் குடும்பங்கள்,
உறவினர்கள்.

*447, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(12553)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 - 02 - 1924



மறைவு
28 - 12 - 1999

## அமரர் பொன்னையா ஆறுமுகம்

*(உரிமையாளர், ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்,*
*20, பெரியகடை, யாழ்ப்பாணம்)*

திதி: 08.01.2003

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
மூன்றாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு - நீங்காது!

*உங்கள் ஆத்மசாந்திக்காக*
*எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*நினைவகலாத:*
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*15/1, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(12870)

# குற்றச்சாட்டுகளை நிரூபித்தால் அரசியலைத் துறக்க நான் தயார்!

## அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன சவால்

**சமீபகாலமாகத் தன்மீது சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்கிறார் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன. "லக்பிம" வார இதழுக்கு அவர் வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:-* தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்து சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக மிகவும் முக்கிய பங்காற்றிய நீங்கள் தற்போது மௌனமாக இருப்பது ஏன்?

*பதில்:-* எல்லைப்புறக் கிராமங்கள் உட்பட வன்னியில் கஷ்டப் பிரதேசங்களில் வாழும் அப்பாவி மக்க



ளின் வாழ்க்கையைப் பாதுகாக்க முனைந்த காரணத்தால் ஜனாதிபதி உட்பட பொ.ஐ.முன்னணியினர் என்னைப் புலிகளின் முகவர் எனக் குறிசுட்டனர்.

எனது பிள்ளைகள் இருவரையும் "புலிக் குட்டிகள்" எனக் கூறும் அளவிற்கு அக்காலத்தில் இந்தக் குற்றச்சாட்டு என்மீது சுமத்தப்பட்டது. வெளிநாடு சென்று உயிரைக் காப்பாற்றுமாறு எனது நெருங்கிய நண்பர்கள் கூறினர். ஆனால், அன்று நான் நாட்டை விட்டு ஓடவில்லை. இங்கிருந்தவாறே இந்த இனவாத யுத்தத்திற்கு முடிவு காணப்படவேண்டும் எனத் தெரிவித்து, அதற்காகச் செயற்பட்டேன். அந்தப் பயணத்தை மேற்கொண்ட நான், இன்று அந்தப் பயணத்தின் வெற்றியை எதிர்பார்த்தவண்ணமுள்ளேன்.

சமாதானத்தை எட்டுவதற்கான பயணம் மிகவும் கடினமானதாகும். சமாதானத்திற்கான ஒளிக்கீற்றை நோக்கியவாறு திருப்தியடைகிறேன். எனது ஒத்துழைப்புத் தேவைப்படும் வேளைகளில் அதை வழங்கத் தயாராயுள்ளேன். இருப்பினும், நான் ஓய்ந்துவிடவில்லை. கவனமாக - தயாராக - பொறுமையாக இருக்கிறேன்.

*கேள்வி:-* வடக்கு - கிழக்கு புனரமைப்புப் பணிகள், அரசு மற்றும் விடுதலைப் புலிகளைக்கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, தங்கள் அமைச்சுக்கான பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனவா?

*பதில்:-* இல்லை. இந்த ஏற்பாடு காரணமாக எனது அமைச்சின் அதிகாரங்களோ அல்லது பொறுப்புக்களோ குறைக்கப்படவில்லை. தற்போது எனது அமைச்சின் பொறுப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனது அமைச்சு யுத்தத்திற்கு - யுத்தத்தின் அச்சுறுத்தல்களுக்கு - முகங்கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைச்சாகும். சுமார் 8 லட்சம் அகதிகள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல், அந்த அகதிகளின் நலனுக்காகப் பாடுபடுதல், அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல், அவர்களது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்குதல், சேதமடைந்த பாடசாலைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றைப் புனரமைத்தல் ஆகிய பணிகள் எனது அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

*கேள்வி:-* நீங்கள் குறிப்பிட்ட விடயங்களில் பல, தற்போது உருவாக்கப்பட்டுள்ள குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுவில் உங்கள் அமைச்சின் பிரதிநிதிகள் எவரும் இல்லையல்லவா?

*பதில்:-* மத்திய அரசைச் சேர்ந்த அமைச்சு என்ற வகையில் பிரதேச மற்றும் மாகாண மட்டங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு எனது அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தோர் ஜயலத் ஜயவர்த்தனவின் அமைச்சுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன எனவும், அவர் ஒதுக்கப்பட்டுவிட்டார் எனவும் கூறமுயற்சிக்கின்றனர்.

*கேள்வி:-* நீங்கள் இப்படிக் கூறினாலும் உங்கள் அமைச்சின்மூலம் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு எதுவித சேவைகளும் மேற்கொள்ளப்படவில்லை என உங்களது அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் நாடாளுமன்றத்தில் கூடத் தெரிவித்துள்ளாரே?

*பதில்:-* ஆம். அதைவிட சிங்களவர் என்ற வகையில் நான் அந்த அமைச்சின் பொறுப்பை வகிக்க பொருத்தமானவர் அல்ல எனவும் அமைச்சர் மகேஸ்வரன் கூறியிருந்தார். ஆனால், எனது அந்தப் பதவியை வரலாற்று மாற்றம் என்ற வகையிலேயே நான் காணுகிறேன். எவ்வாறாயினும் அவரின் ஆவேசத்துடன் கூடிய குற்றச்சாட்டுக்களை நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.(வரவு - செலவுத் திட்டத்திற்கு முன்வைக்கப்பட்ட அறிக்கையைக் காட்டுகிறார்). இதோ பாருங்கள், நான் வடபகுதிக்குச் செய்த பணிகளை. ஏ-9 பாதையில் ஓமந்தையிலிருந்து பரந்தன்வரை அவசர திருத்தப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. யாழ். நூலகத்தை மீளமைப்பதற்கு 5 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. எனவே, நான் ஒன்றும் செய்யவில்லை என எப்படிக் கூறமுடியும்?

*கேள்வி:-* இருப்பினும் இந்த வேலைத் திட்டங்களில் மோசடிகளும் ஊழல்களும் இடம்பெற்றுள்ளன என அமைச்சர் மகேஸ்வரன் குற்றஞ் சுமத்துகிறாரே?

*பதில்:-* அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு முன்னரே பல்வேறு இடங்களில் பல்வேறு விடயங்களை எனக்கு எதிராகக் கூறிக்கொண்டிருக்கும்போது நான் பிரதமருக்கு கடிதமொன்றை எழுதி எனது மேற்கூறப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாக சந்தேகம் ஏதும் இருப்பின், உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தேன். பக்கச்சார்பற்ற எந்தவொரு விசாரணையையும் எதிர்நோக்கத் தயார் என அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தேன். மேற்கொள்ளப்படும் விசாரணையின்போது நூல் அளவிலேனும் ஊழலில் எனக்குத் தொடர்பு இருப்பதாக நிரூபிக்கப்பட்டால் நான் அரசியலில் இருந்து விடைபெறுவேன். இவையாவும் அடிப்படை எதுவுமற்ற குற்றச்சாட்டுக்களாகும். இந்தக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் அமைச்சர் மகேஸ்வரனை அரசியலுக்குக் கொண்டுவந்தவனும் நானே.

*கேள்வி:-* உங்கள் சகோதரியின் நிறுவனத்திற்கு வடபகுதியில் பணி ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்ததாக அவர்(மகேஸ்வரன்) சாட்சிகளுடன்கூடிய விடயங்களை முன்வைத்தார் அல்லவா?

*பதில்:-* ஆம். அவர் அப்படியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகிறார்தான். உண்மையைக்கூற எனக்கு அச்சமில்லை. நான் இது தொடர்பான உண்மை நிலையைக் கூறுகிறேன். எனது தந்தை இந்நாட்டிலுள்ள பிரபலமான கட்டட நிர்மாண மற்றும் வீதி அபிவிருத்தி தொடர்பான ஒப்பந்தகாரர் ஆவார். எனது குடும்பத்தில் 7 உறுப்பினர்கள் உள்ளனர். குடும்பத்தில் நானே மூத்தவன். எனக்கு 5 சகோதரிகள் உள்ளனர். எனது தந்தையார் 1972இல் மாரடைப்புக்காரணமாக இறந்தார். அதைத் தொடர்ந்து தந்தையின் பணிகளை எனது தாயார் பொறுப்பேற்றார். 1996இல் எனது தாயாரும் எனது சகோதரி ஒருவரும் இணைந்து நிறுவனம் ஒன்றை பதிந்து நிர்மாண ஒப்பந்தப் பணிகளில் ஈடுபட்டனர். 1996இல் பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சியின் போதும் உரிய முறையில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்து, ஒப்பந்தங்களைப் பெற்று நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் யுத்தநிறுத்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதையடுத்து வடக்கில் வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்

**தமிழில்: வியெஸ்ரி**

பிக்கப்பட்டன. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்து, ஒப்பந்தங்களைப் பெற்று அவர்கள் வேலைகளை ஆரம்பித்துள்ளனர். மேலும், இந்தப் பணி ஒப்பந்தம் எனது அமைச்சினால் வழங்கப்படவில்லை. பத்திரிகைகளில் வெளியான பகிரங்க அறிவித்தல்களின்படி கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்து அமைச்சர் திலக் மாரப்பனவின் கீழான நெடுஞ்சாலை அமைச்சிடம் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளனர். இந்த வேலைகள் தொடர்பான கேள்விப்பத்திர நடவடிக்கைகள் எனது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு அதில் ஏதாவது முறைகேடு

**மாற்றார் தோட்டத்திலிருந்து...**

கள் இடம்பெற்றிருப்பின் என்மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தலாம். நான் அமைச்சர் என்ற காரணத்திற்காக எனது சகோதர சகோதரிகள் மேற்கொள்ளும் ஒப்பந்த வேலைகளை எல்லாம் நிறுத்தி, அவர்கள் பட்டினியாய் இருக்கவேண்டும் என்றா கூறுகிறார்கள்? ஏனைய பிரஜைகளுக்குள்ள உரிமைகள் அவர்களுக்கு இல்லையா?

*கேள்வி:-* அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக பிரதமர் தங்களிடம் விசாரிக்கவில்லையா?

*பதில்:-* இல்லை. தங்களிடம் நான் முன்னர் கூறியவாறு அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நான் பிரதமரிடம் கோரியிருந்தும் இதுவரை பிரதமர் என்னிடம் அதுபற்றிக் கேட்கவில்லை.

*கேள்வி:-* எவ்வாறாயினும் உங்கள் அமைச்சுக்குரிய ஒரு சில நடவடிக்கைகளை பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோனிடமும் வேறு சில அதிகாரிகளிடமும் கையளிக்க பிரதமர் நடவடிக்கை எடுத்துள்ளார். இல்லையா?

*பதில்:-* இல்லை. அப்படியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. பிரதமரின் செயலாளருக்கு றிபிள் R.(R.R.R.) அதாவது புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, மீள் நிர்மாணம் ஆகிய பணிகளை ஒன்றிணைக்கும் விசேட பதவி வழங்கப்பட்டுள்ளது. வடக்கில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும்போது சகல அமைச்சுக்களையும் ஒன்றிணைக்கப் பொருத்தமான இடம் பிரதமரின் பணிமனையே ஆகும். அங்குள்ள முக்கிய சிவில் அதிகாரியே பிரட்மன் வீரக்கோன் ஆவார். எனவே, அந்த ஒருங்கிணைப்புப் பணிகள் அவரால் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான பணிகள் எனது அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

*கேள்வி:-* இருப்பினும் தங்கள் அமைச்சின் பணிகள் சோதனைகளுக்குள்ளாகின்றன அல்லவா?

*பதில்:-* இல்லை. அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. வடபகுதி தொடர்பான நடவடிக்கைகளில் வேறு அமைச்சுகளுக்கு பணிப்புரை வழங்க கட்டளையிட என்னால் முடியாது. அவ்வாறான பணிப்புரைகளை, கட்டளைகளை வழங்குவது தேசிய ரீதியாக கொள்கைகளை வகுப்பது பிரதமர் பணிமனையேயாகும்.

*கேள்வி:-* நல்லது. அவ்வாறெனில், நீங்கள் அரசியலுக்கு அழைத்துவந்த - தங்களது அரசில், தங்களது அமைச்சரவையில் உங்களுடன் செயற்படும் அமைச்சர் மகேஸ்வரன் தங்கள்மீது அவ்வாறான குற்றச்சாட்டுக்களை ஏன் சுமத்துகிறார்?

*பதில்:-* அதுவும் அவரது அரசியல் முறையாகும். மேலும், இந்த அமைச்சைத் தன்னிடம் வழங்குமாறு அவர் மீண்டும் மீண்டும் பிரதமரிடம் கோரிவருகிறார். நான் விடுத்த கோரிக்கைக்கு இணங்கி பிரதமர் இந்த அமைச்சை என்னிடம் கையளிக்கவில்லை. பிரதமர் என்மீது நம்பிக்கை கொண்டிருக்கும்வரை நான் இந்த அமைச்சின் நடவடிக்கைகளை மேற்கொள்வேன். மேலும், நான் கம்பஹா மாவட்டத்தில் அரசியலில் ஈடுபடுபவன். இந்த அமைச்சால் எனக்கு எந்தவோர் அரசியல் ஆதாயமும் கிடையாது. அவர் வடக்கில் அரசியலில் ஈடுபட்டுள்ளதால் அவருக்கு இந்த அமைச்சை வழங்கினால் அரசியல் ஆதாயம் கிடைக்கக்கூடும். வடக்கில் எனக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றிய பின்னரே மீண்டும் தெற்கில் எனது மக்களிடையே செல்லுகிறேன். அவ்வாறு எந்தே நான் நாட்டுமக்களுக்காக ஆற்ற வேண்டிய சேவைகளைச் செய்கிறேன். மீண்டும் வாக்குகளைக் கோருகிறேன். ★

---

# யாழ்ப்பாணத்திலும் நவீன ச.தொ.ச. எதிர்வரும் 10ஆம் திகதி திறப்பு!

கொழும்பு,ஜன.8

எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமொன்று திறந்துவைக்கப்படும். கொழும்பில் தற்பொழுது திறக்கப்பட்டுவரும் நவீன ச.தொ.ச. சந்தைத் தொகுதிபோன்றே இந்த நிலையமும் அமையும்.

வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் கடந்த இரு தசாப்தங்களாக நடந்த யுத்தத்தினால் வர்த்தக நடவடிக்கைகள் சீர்குலைந்தன. அவற்றைக் மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தற்போது எனது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் மூன்று ச.தொ.ச. நிலையங்கள் இருந்தன. காலப்போக்கில் அவை மூடப்பட்டன. தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையால் மீண்டும் அங்கு ச.தொ.ச. நிலையம் ஒன்றைத் திறக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நவீன ச.தொ.ச. சந்தைத் தொகுதி 24மணி நேரமும் திறந்திருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் ச.தொ.ச. நிறுவனம் வர்த்தக மயப்படுத்தப்பட்டுள்ளதால் இனி, யாழ்.மக்கள் சிறந்த பயனைப் பெறலாம் - இவ்வாறு அவர் சொன்னார். (ஓ)

## செல்வா நினைவாலயத்துக்கு அலங்கார மதில்

தந்தை செல்வா நினைவாலயத்தைச் சுற்றிவர அலங்கார மதில் அமைக்கும் பணிகள் நிறைவடையும் தறுவாயிலுள்ளன.

நினைவாலயத்திற்கு உள்ளே மக்கள் செல்லக்கூடிய வகையில் பெரிய அளவிலான இரும்பு 'கேற்' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## மினிபஸ் சாரதிகள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.8

ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் வைத்து நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் மினிபஸ் சாரதி ஒருவர், மற்றொரு மினிபஸ் சாரதியால் தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து தாக்கியவர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி அப்பிரதேச மினிபஸ் சாரதிகள் அனைவரும் உடனடியாக பகிஷ்கரிப்பில் குதித்தனர்.

இதனால், பொதுமக்கள் போக்குவரத்துச் சபை பஸ்களில் பயணஞ்செய்யவேண்டி ஏற்பட்டது.

இதுதொடர்பாக தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்திடம் முறையிட்டதை அடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சங்கம் உறுதியளித்தது.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் பகிஷ்கரிப்புக் கைவிடப்பட்டு போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (ஐ-16-9)

# ஆதரவற்ற பெண்களுக்கு உதவ செயற்றிட்டங்கள்

## சமூக சேவை திணைக்களம் நடவடிக்கை

வலி.தெற்கு,ஜன.8

ஆதரவற்ற பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்குடன் பல்வேறு செயற்றிட்டங்கள் இவ்வருடத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக தத்தம பகுதியிலுள்ள கணவனை இழந்த அல்லது கணவரால் கைவிடப்பட்ட பெணகளின் விவரங்களைத திரட்டுமாறும் -

அவர்களுக்கு உதவிகள், மானியங்கள் வழங்க ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் -

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலர்களை, வடக்கு கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளர் என்.ரஞ்சினி அறிவுறுத்தியுள்ளார்.

ஐம்பது வயதுக்குட்பட்ட இத்தகைய ஆதரவற்ற பெண்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கேற்ற முறையில் மானிய அடிப்படையில் முதற்கட்டமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி விதிமுறைகளுக்கு பொருத்தமான பெண்கள் தத்தம் பிரதேச செயலகங்களில் விண்ணப்பிக்கலாம்.

இவர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் கிராம சேவையாளரின் சிபாரிசுடன் பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்தித் தங்கள் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-1:52)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல ஆவணங்களுடன் நல்ல நிலையிலுள்ள 50 சிறி தொடர் இலக்கமுடைய L.3. Hundred Van (டீசல்) விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி, T.P. 3529, 2867. (12920)

நிறை கூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம்செய்து வேண்டிய அளவுகளில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (12913)

புறொயிலர், கல்பேட்ஸ், வான் கோழிகள் என்பன விற்பனைக்கு உண்டு. புறொயிலர் தினமும் சுத்தம செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு (பூங்கனிச்சோலைக்கும் முடமாவடிக்கும் இடையில்) (12856)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12916)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து, உங்களுக்குத் தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12709)

## கோழி முட்டை விற்பனை

தரமான Prima, சிவப்புக் கோழி முட்டைகள் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12921)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள நாளை (09-01-2003) வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். (முதல நாள் தடுப்பு மருந்து இலவசம்). இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12562)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

10 கிழமை நிரம்பிய, அழகான, காவலுக்குரிய, Great Dane Dobermann Pincher தடுப்பூசி போடப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12766)

11/2 மாதம் நிரம்பிய கறுப்பு, வெள்ளை நிறபொமினேரியன் இன பெண் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 64A, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். (12981)

## வகுப்புகள்

ஆங்கிலம் மூலம் ஆண்டு 6 கணிதம், English, O/L A,B,C பெறுபேறடைய A/L Paper Class, G.A.Q, Spoken English இரு மாதங்களில் கற்பிக்கப்படும். தொடர்பு: இல.85, சிவன்கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (12821)

## A/L 2005

A/L 2005 Batch இற்கான General English வகுப்புகளுக்கு தொடர்பு: (08-01-2003 புதன் மாலை 4.00 மணி) சோ.சுப்பிரமணியம், இல.62, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (12868)

## இன்று சனிமாற்றம்

(08-01-2003 - 07-04-2003) மூன்று மாத சனி இடபராசியில் வக்கிரமும் தைப் புத்தாண்டுப் பலன்களும் (எல்லா ராசிப்பலன்களும்) ரூபா15/- எங்கும் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியா 'சத்யா' 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. 021-222 2753 (12882)

## திருமண சேவை

சகல ஆண், பெண் பட்டதாரிகளின் குறிப்புகள் தேவை. தொடர்பு: மா.பாலசுப்பிரமணியம், காந்தி ஆச்சிரம வீதி, தும்பளை, பருத்தித்துறை. (12888)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், 22/4, சென்பற்றிக்ஸ வீதியைச் சேர்ந்த பேசுராஜா அனுஷா என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.846812326V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (12918)

## கணிதம்

தரம் 8 முதல் O/L வரையான வகுப்புகளும் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகளும் 15.01.2003இல் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்பு:

ஆசிரியர்,
*126, Chapel St., Jaffna.*
*252, Jaffna Rd., Manipay.*

☞ பிரத்தியேக வகுப்புகள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். (12923)

## முஸ்லிம் வட்டாரத்தை துப்புரவுசெய்ய நடவடிக்கை

பற்றைகள் நிறைந்து காணப்படும் யாழ். முஸ்லிம் வட்டாரப் பகுதியைத் துப்புரவுசெய்ய மாநகரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அரசு - விடுதலைப் புலிகளிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முஸ்லிம் மக்களில் ஒரு பகுதியினர் தமது இருப்பிடங்களுக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையிலேயே முஸ்லிம் வட்டாரம் மக்கள் குடியேறுவதற்கு வசதியாக துப்புரவு செய்யப்படுகிறது. (ஒ-86)

## தீவகத்தில் நாடகம் மேடையேற்றம்

வன்னி கலைக்கல்லூரி மாணவர்களினால் "இரத்த நதியில் பூத்த வெள்ளைரோஜா"என்னும் நாடகம் தீவுப் பகுதியில் மேடையேற்றப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை அனலைதீவிலும், நாளை எழுவைதீவிலும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெடுந்தீவிலும் இந்த நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தீவகக்கோட்ட அரசியல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-73)

## COMPUTER OPERATOR தேவை

கணனி இயக்குவதிலும், தமிழ், ஆங்கிலத்தில் ரைப் செய்வதிலும், ரெலிபோன் இயக்குவதிலும், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் கூடிய அனுபவம் உள்ள மற்றும் Diploma, Degree சான்றிதழ்களை உடையவர்கள் கீழ்வரும் முகவரிக்கு தொடர்புகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

சர்வதேச மாணவர் பேரவை,
தலைமைச் செயலகம், பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(c/25860)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1977 | 1996 |
| 04 | 12 |
| 19 | 30 |



### அருணாசலம் சிவச்செல்வன்

திதி: 08-01-2003 (ஷஷ்டி)

*ஆறாண்டுகள் சென்றதடா*
*மாறவில்லை உன் திருவதனம்*
*தேடி நித்தம் ஏங்குகின்றோம்*
*காணவில்லை உன் திருவுருவம்?*
*கூடியிருந்து அரவணைத்து - இன்று*
*எம்மை விட்டுச் சென்றதேனோ?*

*சிவகஜன் தொலைத்தொடர்பகம்,*
*சந்தை வீதி, கொடிகாமம்.*
*T.P. No.: 0777 273607* (12922)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 03 |
| 06 | 01 |
| 1928 | 1998 |



### அமரர் சிற்றம்பலம் நடராசபிள்ளை

*(ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர் - வரணி)*

திதி: 08-01-2003 (ஷஷ்டி)

பாசமிகு தந்தையாய் பாரினில்
எமை வளர்த்து
வாழ்விலே வளம் பல பெற்று நாம் வாழ
வழி அமைத்த தந்தையே!
தாங்கள் மறைந்து ஆண்டுகள்
ஐந்து ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்!
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
உங்கள்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வாழைத்தோட்டம்,*
*வரணி வடக்கு,*
*வரணி.* (C/25811)

## ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான

### வருடாந்த அலங்கார உற்சவம்

ஆரம்பம்: 09-01-2003

| | |
|---|---|
| தினமும் காலை 07.00மணி | - அபிஷேகம் |
| தினமும் காலை 09.30மணி | - பூஜை |
| தினமும் காலை 10.30மணி | - சொற்பொழிவு |
| தினமும் காலை 11.00மணி | - சுவாமி உலாவருதல் |
| நண்பகல் 12.00 மணி | - அன்னதானம் |
| 17.01.2003 | - இரதோற்சவம் |
| 18.01.2003 | - தீர்த்தோற்சவம் |

தீர்த்தோற்சவத்தன்று புதிய இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும்விழா இடம்பெறும்.

இராஜகோபுர அத்திவாரத்தில் சங்குவைக்க விரும்புவோர் தேவஸ்தானத்துடன் தொடர்புகொள்ளவும்.

- தேவஸ்தானம்.

(C-25866)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 21 |
| 06 | 12 |
| 1934 | 2001 |



### அமரர் கனகரட்ணம் நடராசா

திதி: 08-01-2003

தீபத்தின் சுடரொளியாய் -மலர்
சிந்திடும் புன்சிரிப்பாய் - மிளிரும்
தேசத்தின் திரு உருவாய்
திகழ்ந்த எம் அகலா விளக்கே!
சோதனைகள் எது வரினும் சாயாத கோபுரமே!
ஈராறு மாதங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் - என்றும்
எம்மை விட்டு நீங்காத சுவடுகள்.

*தகவல்: P.சரஸ்வதி,*
*(சகோதரி)*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.* (12879)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 07 |
| 05 | 12 |
| 1920 | 2002 |



### அமரர் கார்த்திகேசு மயில்வாகனம்

முப்பத்தொருநாளும் ஆயிற்றோ நீங்கள் எமைப் பிரிந்து
எப்போதும் உங்கள் திருமுகம் எம் முன்னே தோன்றுகிறதே!
எந்நாளும் தங்கள் நினைவுடனே இப்பூவுலகில் நாங்கள்
இந்நாளில் வாழ்கின்றோம் இதயக் கவலையுடனே!

*இணுவில் கந்தசுவாமி கோயிலடி,*
*இணுவில் மேற்கு.* (12991)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### புவிராஜரட்ணம் சுகுமார்

*(Renuka Group of Companies)*

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட புவிராஜரட்ணம் சுகுமார் அவர்கள் 07.01.2003 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புவிராஜரட்ணம் மற்றும் சரஸ்வதி அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பவளம் ஆகியோரின் அன்பு மருமகனும் மாலாவின் அன்புக் கணவரும் சுஜீவன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரி, அமரர் திருஞானசம்பந்தா மற்றும் விவேகானந்தன் (இலங்கை வங்கி, யாழ்.), கதிர்காமநாதன் (கனடா), யோகானந்தன் (சவூதி), பரமேஸ்வரி (சுவிஸ்), நந்தகுமார் (அமெரிக்கா), மோகன்ராஜ் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலுக்கான தகனக்கிரியைகள் நாளை (09.01.2003) வியாழக்கிழமை கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரி:*
***19/1, Pokkana Rd.,***
***Off Kawdana Rd.,***
***Dehiwela.*** (12924)

தகவல்:
பு.விவேகானந்தன் (சகோதரன்)
*செட்டித்தெரு, நல்லூர்.*

# கூட்டணி எம்.பி. உப சபாநாயகரானால் விளைவுகளுக்கு அக்கட்சியே பொறுப்பு!

## ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா எச்சரிக்கை

கொழும்பு,ஜன.8

உப சபாநாயகர் பதவியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராவது ஏற்றுக்கொண்டால், அதற்கான விளைவுகளுக்கு அக்கட்சியே பொறுப்பேற்க வேண்டும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் தமிழீழ விடுதலை இயக்க முதல்வர் என். ஸ்ரீகாந்தா.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

நாடாளுமன்றத்தில் வெற்றிடமாக உள்ள உப சபாநாயகர் பதவிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரியை நியமிப்பதற்கு அரசுத் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

உப சபாநாயகர் பதவி என்பது நாடாளுமன்றத்துடன் மாத்திரம் சம்பந்தப்பட்ட விடயம். ஆயினும் கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக வாதாடுவோம், போராடுவோம் என்றும் -

தமிழ்த் தேசிய இனத்தின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரமே என்றும் - பிரகடனப்படுத்தி, தமிழ் மக்கள் முன் சென்று மகத்தான ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இத்தகைய எந்தவொரு பதவியையும் ஏற்றுக்கொள்வதை இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எமது ரெலோ இயக்கம் எதிர்க்கின்றது. 1965-69 காலகட்டத்தில் காலஞ்சென்ற டட்லி சேனநாயக்கவின் தலைமையில் ஏழு கட்சிகள் சேர்ந்து அமைத்திருந்த தேசிய அரசில் அன்றைய இரண்டு பிரதான தமிழ்க்கட்சிகளும் அங்கம் வகித்திருந்தபோது.



ஒரு கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு மந்திரிப் பதவியும், மற்றக் கட்சியைச் சேர்ந்தவருக்கு உப சபாநாயகர் பதவியும் அந்த அரசினால் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், தமிழ் இனத்துக்குப் பாதகமான 'ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்த அமுல் சட்டம்', 'கட்டாய அடையாள அட்டைகள் சட்டம்' என்பன அந்த அரசினால் கொண்டுவரப்பட்டபோது, அந்த இரு தமிழக் கட்சிகளால எதனையும் சாதிக்கமுடியவில்லை.

இந்த வரலாறு மீண்டும் திரும்புவதை தமிழினம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது.

இப்பொழுது உப சபாநாயகர் பதவிக்கு பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த வீ.ஆனந்தசங்கரி எம்.பி., கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிலேயே ஆகக்கூடிய நாடாளுமன்ற அனுபவம் கொண்டவர். 1970களிலேயே நாடாளுமன்றத்துள் பிரவேசித்தவர்.

உப சபாநாயகர் பதவியை மாத்திரமல்ல சபாநாயகர் ஆசனத்தையே அலங்கரிக்கும் ஆற்றலும் ஆளுமையும் அவருக்கு நிறையவே உண்டு. இருந்தாலும் எம் இனத்தின் இன்றைய நிலைமையில் அரசு வழங்க முன்வரும் எந்தவொரு பதவிச் சலுகையையும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

இதையும் மீறித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராவது பதவியேற்க முன்வந்தால் அதற்கான சகல விளைவுகளுக்கும் அந்தக் கட்சியே பொறுப்பேற்கவேண்டியிருக்கும்.

- இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்நகரில் பல வீதிகள் வெளிச்சம் இன்றி இருளில்

அரியாலை,ஜன.8

யாழ்நகரில் பல முக்கிய வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படாததால் இரவு முழுவதும் இந்த வீதிகள் இருளில் மூழ்கிவிடுகின்றன. வீதிகளில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களைச் சந்திக்க நேரிடுகின்றது.

நகரில் உள்ள வீதிகளுக்கு, வீதி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். அரச அதிபர் அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும் சில வீதிகளுக்கு, வீதிவிளக்குகள் பொருத்தப்படவில்லை.

தந்தை செல்வா நினைவாலயத்திற்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதி, கொழும்புத்துறை பிரதான வீதி, பழையபூங்கா வீதி என்பனவும் வெளிச்சமின்றி இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இரவு நேரங்களில் இந்த வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(ஐ-17)

# விடுதலைப் புலிகளின் கோரிக்கை ஜனநாயக விரோதமானது!

## இப்படிக் கூறுகிறது ஈ.பி.டி.பி.

கொழும்பு,ஜன.8

மாற்று இயக்கங்களுடனும், பிற அரசியல் கட்சிகளோடும் இணைந்து செயற்படுவதை உடன் விட்டுவிடும்படி கோரிக்கை விடுப்பது ஜனநாயக விரோதமானது.

- இவ்வாறு ஈ.பி.டி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

'புலிகளின் கோரிக்கை ஜனநாயக விரோதமானது' என்ற தலைப்பில் அக்கட்சி வெளியிட்டுள்ள செய்தி ஊடகங்களுக்கான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாற்று இயக்கங்களுடனும், பிற அரசியல் கட்சிகளோடும் இணைந்து செயற்படுவதை உடன் விட்டுவிடும்படி கோரிக்கை விடுப்பது ஜனநாயக விரோதமானது. இது பிற அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்களின் உறுப்பினர்களுக்குப் புலிகள் விடுத்துள்ள எச்சரிக்கை என்றே கருதப்படவேண்டும். புலிகள் விடுக்கும் இத்தகைய மிரட்டல் மற்றும் மறைமுக அச்சுறுத்தல்கள் குறித்துப் பொது மக்களும், சர்வதேச சமூகமும் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் புலிகளின் அரசியல்துறை வெளியீட்டுப் பிரிவினரால் சில துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இத்துண்டுப் பிரசுரங்களின் உள்ளடக்கம் குறித்துக் கட்சி பரிசீலித்துள்ளது. இவ்வகையில் கட்சியின் செயற்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டியுள்ளது. சொந்த மண்ணில் அனைவரும் சுகமாக வாழவேண்டும். அதற்கு உறுதியான சமாதானம் நிலவவேண்டும். சமாதானமும், அமைதியும் ஏற்படவேண்டும் என்பதற்காகக் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து குரல் கொடுத்து, அதனை உருவாக்க நாம் பாடுபட்டு வருகிறோம். மேலும், அமைதி, சமாதானம் என்பன நிலைபெறவேண்டும் என்பதற்காகவே ஆயுதங்களைக்கூடத் தூக்கி எறிந்தவர்கள் நாங்கள். எனவே, சொந்த மண்ணில் அமைதி, சமாதானம் நிலவுவதை விரும்பாத சக்திகள் என்று எம்மை எவரும் அடையாளப்படுத்த முடியாது. அத்துடன், கபடத்தனமான நாடகம் எதனையும் அரங்கேற்ற வேண்டிய தேவையும் எமக்கில்லை.

அரசுடன் புரிந்துணர்வு என்ற போர்வையில் சமாதானச் சூழலைத் தோற்றுவிப்பதாகக் கூறி மக்களுக்குள் ஊடுருவிய புலிகளே ஆள் கடத்தல், கொலை, கப்பம் வாங்குதல், பலவந்த ஆள்சேர்த்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை அனைவரும் நன்கறிவர். உதாரணமாக, அழகுதுரையைக் கொலை செய்தவர்கள் புலிகள்தான் என்பதை நீதிமன்றத் தீர்ப்புக்கூடத் தெளிவாக்கி உள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலான காலப் பகுதிக்குள் மட்டும் சுமார் 48 பேர் காணாமற்போயுள்ளனர். இவர்கள் காணாமற்போன சம்பவங்களுக்கு முற்றுமுழுதான பொறுப்பாளிகள் புலிகளே ஆவர்.



இச்சம்பவங்களுடன் புலிகளுக்குத் தொடர்பு இல்லையென்பது உண்மையாகுமெனின் புலிகள் தவிர்ந்த பலமுள்ள வேறு ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றனவா? என்ற கேள்வி தவிர்க்கமுடியாது.

எனினும், புலிகளால் புரிந்துணர்வு ஒப்பந்தம் எத்தனை தடவைகளில், எத்தனை வகைகளில் மீறப்பட்டுள்ளன என்பதை பொதுமக்கள் நன்கு அறிவர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கைகளும் இதற்குச் சான்றுபகரும்.

எனவே, தமிழ்மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்து ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு அனைவருக்கும் உரியது என்பதை உணர்ந்து செயற்படப் புலிகள் முன்வரவேண்டும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க புலிகள் மீது போதுமான அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது.

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு இம்முறை 654 மாணவர் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.8

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் இம்முறை 654 மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2002 - 2003(ஓக.) கல்வி ஆண்டிற்கு புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் அண்மையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் மருத்துவத்திற்கு 99 பேரும், கலைப்பீடத்திற்கு 193 பேரும், விவசாயத்திற்கு 56 பேரும், முகாமைத்துவத்திற்கு 87 பேரும், வர்த்தகத்திற்கு 56 பேரும், பௌதிக விஞ்ஞானத்திற்கு 120 பேரும், உயிரியல் விஞ்ஞானத்திற்க 50 பேருமாக மொத்தம் 654 மாணவர்கள் புதிதாக அனுமதி பெற்றுள்ளனர்.

கடந்த கல்வி ஆண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களை விட கலைப்பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களுக்கு அதிக மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை - கலைப்பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் கணிசமான அளவு வீழ்ச்சி காணப்படுகிறது.

ஒவ்வொரு துறைக்கும் கடந்த கல்வி ஆண்டிலும் புதிய கல்வி ஆண்டிலும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:-

| பீடம் | 2002 - 2003 (ஏப்.) | 2002 - 2003 (ஓக.) |
|---|---|---|
| மருத்துவம் | 80 | 99 |
| விவசாயம் | 57 | 56 |
| முகாமைத்துவம் | 78 | 87 |
| உயிரியல் விஞ்ஞானம் | 48 | 50 |
| பௌதிக விஞ்ஞானம் | 102 | 120 |
| வர்த்தகம் | 44 | 49 |
| கலை | 225 | 193 |

இதேவேளை - கலைப்பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு கிடைத்துள்ளது.

இவர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை உரிய ஆவணங்களுடன் வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் யாழ்.பல்லைக்கழக பதில் பதிவாளர் திருமதி அனுஜா சிவனேஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஏ-5)

## விடைத்தாள்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்டத்தில் மதிப்பிடும் பணி நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் யாவும் நேற்றுமுன்தினம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

கடந்த மாதம் 27ஆம் திகதி தொடக்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையும் இப்பணிகள் நாடுமுழுவதிலும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தில் இப்பணிக்கென 3 நிலையங்கள் அமைக்கப்பட்டு சுமார் 750 ஆசிரியர்கள் மதிப்பிடும் பணியில் ஈடுபட்டனர்.

(ஏ-10)

## பண்ணையில் மரக்கறி வியாபாரத்துக்கு

# கொட்டகை வசதி செய்துதர கோருகின்றனர் வியாபாரிகள்

அரியாலை,ஜன.8

பண்ணையில் உள்ள மீன் சந்தைக்கு முன்பாக மரக்கறி மற்றும் பழவகைகள் விற்பனை செய்யும் வியாபாரிகள் தங்களுக்கு கொட்டகை வசதி அமைத்து தரவேண்டும் எனக் கோருகின்றனர்.

மீன் சந்தைக்கு முன்பாக உள்ள புற்தரையில் வைத்தே வியாபாரிகள் மரக்கறிகளை விற்பனை செய்துவருகின்றனர்.

கொட்டகை வசதி எதுவும் இல்லாததால் மழை பெய்யும்போது அவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாவதைக் காணமுடிந்தது.

(ஐ-17)

திருமண வைபவங்கள், நிகழ்வுகள் அனைத்தும் மிகக் குறைந்த விலையில் வீடியோ கஸட்டில் இருந்து CD க்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
VIDEO TO CD
PROGRAME TUTORIALS CLIPARTS GAMES
MP3 CD'S
புதிய பழைய பாடல்கள்
MPAQ VOL 01-31
FONTS (Arabic, Sinhala, Tamil)
INDIAN FONTS
CD WRITING
CD TO CD COPY
(இலவச Blank CD உடன்)
BLANK CD'S IMATION Verbatim MITSUBISHI CHEMICAL
MICRO PC SYSTEMS
இல :175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0777-308417

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
கொம்ப்யூட்டர் டிப்ளோமா பாடநெறிகள்
ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma in MS Office XP — காலம் : 3 மாதங்கள்
Diploma in Computer Studies — காலம் : 3 மாதங்கள்
Diploma in Desktop Publishing — காலம் : 3 மாதங்கள்
Diploma in Computer Programming — காலம் : 3 மாதங்கள்
Diploma in Web Design — காலம் : 3 மாதங்கள்
CERTIFICATE COURSES
• Certificate in Pagemaking
• Certificate in Corel Draw
• Certificate in Photoshop
• Certificate in Internet & E-mail
• Certificate in Visual Basic
• Certificate in HTML
அறிமுக கட்டணச் சலுகை 2,900/- மட்டுமே
The People's IT Academy
ASIAN COMPUTERS
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அறிமுக கட்டணச் சலுகை 31.01.2003 வரை மட்டுமே !
ICM England
Approved Training & Examination Centre
உயர்கல்வி அமைச்சின் ஓர் அங்கமான TVECஇல் பதியப்பட்டதும ICM UK மற்றும் IMIS இங்கிலாந்து உயர்கல்வி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட கணனி பாடநெறிகள்

# யாழ்.நகரப் பகுதியில் இப்படியும் ஒரு மோசடி

நல்லூர்,ஜன.8

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடியகற்றும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் பணியாளர் என்று தன்னைக் கூறிக்கொண்டு, வர்த்தகர்களிடமிருந்து பெருமளவு பொருள்களை வாங்கி மோசடி செய்தார் என்றுகூறப்படும் நபர் ஒருவர் யாழ்.நகரில் சிக்கியுள்ளார்.

இந்நபர் கண்ணிவெடியகற்றும் நிறுவனம் ஒன்றின் சீருடையுடன் சென்று, அந்த நிறுவனத்தின் தேவைக்கெனக்கூறி பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான மின்சார சாதனங்களை கடன் அடிப்படையில் வாங்கியுள்ளார். உரிய நாளில் கடன்தொகை செலுத்தப்படாமையால் கடனுக்கு பொருள்களை வழங்கிய வர்த்தகர் ஒருவர், அந்த நிறுவனத்துடன் தொடர்புகொண்டபோது அந்த நபர் புரிந்த மோசடி அம்பலத்துக்கு வந்தது. சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து சிறிது காலத்திற்கு முன்பே அந்நபர் விலகிவிட்டார் என்றும் நிறுவனத்தில் கடமையாற்றியபோது வழங்கப்பட்ட சீருடையை வைத்துக்கொண்டே இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பதும் பின்னர் தெரியவந்தது.

இதேபாணியில் நகரில் உள்ள வேறு ஒரு வர்த்தக நிலையம் ஒன்றில் தனது கைவரிசையைக் காட்டியபோது அங்குவைத்து முன்பு ஏமாறிய வர்த்தகர்களால் பிரஸ்தாப நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ-ரி)

## சாரணிய வழிகாட்டுநர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.8

பெண் சாரணிய வழிகாட்டுநர் ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவில் நடைபெறவுள்ளது. (ஐ-ரி)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.8

காங்கேசன்துறையில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய சடலம், தொண்டமனாறுக் கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை காணாமற்போன மீனவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தொண்டமனாற்றுக் கடற்பகுதியில் கடற்படையின் படகு ஒன்று மீனவர் படகை மோதியதில் பொன்னன் ஞானேஸ்வரன் (வயது 33) என்ற மீனவர் காணாமற்போயிருந்தார்.

காங்கேசன்துறையில் இருந்து நேற்றுமுன்தினம் எடுத்துவரப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை காணமற்போனவரின் சகோதரரான பொன்னன் மகேஸ்வரன் நேற்றுக் காலை யாழ்.ஆஸ்பத்திரியில் அடையாளம் காட்டினார்.

சடலத்தில் காணப்பட்ட கறுப்பு நிற ரீசேட், கையில் கட்டி இருந்த நூல், அவரின் கையில் சிறுவயது முதல் காணப்பட்ட வடு ஆகியவற்றைக் கொண்டு சடலத்தை அவர் அடையாளம் காட்டினார்.

இதையடுத்து சடலத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ-3-139)

## பிறந்தநாள் பாராட்டு



**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

*(தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம்)*

**இவர்கள் எமது சைவத்திற்குப் பெரும் தொண்டாற்றியதுடன் எமது சாவற்கட்டு கிராம மக்களின் நலன்கருதி மகாத்மா சிறுவர் பாடசாலை, குமுதினி சிறுவர் பாடசாலை ஆகியவற்றுக்கு இலவச உணவுத்திட்டத்தை மேற்கொண்டதையிட்டு அவரது 78ஆவது பிறந்த நாளில் வாழ்த்துவதுடன் இத்திட்டத்திற்கு தொடக்குநராக இருந்த சட்டத் தரணி அபிமன்ஜசிங்கம் (சாந்தா) அவர்களையும் வாழ்த்தி இருகரம் கூப்பி நன்றி தெரிவிக்கிறோம்.**

*சாவற்கட்டு,*
*ஆனைக்கோட்டை.* (12955)

நிர்வாகிகள், மக்கள்,
மகாத்மா சனசமூக நிலையம்

## யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### முக்கிய அறிவித்தல்

**பருத்தித்துறை இறங்குதுறையில் எமது சங்கத்தின் பாரவூர்தி அல்லாத சில பாரவூர்திகளை பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடுத்த சிலர் முயற்சி செய்வதினால் எமது சங்கம் இம்முயற்சிக்கு எதிராக சாத்வீகமாக போராட்டம் ஒன்றை இன்று 08.01.2003 ஆம் திகதி புதன்கிழமை நடத்துகின்றது. எனவே இன்று 08.01.2003 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு (புதிய நேரம்) அனைத்து பாரவூர்தி உரிமையாளர்களையும் சாரதிகளையும் பருத்தித்துறை பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாக ஒன்று கூடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

*நிர்வாகம்*

*216, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12940)

யா/மா/தனியார் பாரவூர்தி
உரிமையாளர் கூ.சங்கம்.

## எனது மனமார்ந்த வாழ்த்துக்களும் ஆசிகளும்

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள் **78 ஆவது அகவை அடையும் இத்தருணத்தில் அவரின் சமய, சமூகப் பணிகளுடன் அந்தணப் பெருமக்களுக்கும் ஆற்றிய சேவைகள் மேலும் தொடர்வதற்கும் பல்லாண்டு காலம் வாழ்வதற்கும் அம்பாளின் அனுக்கிரகம் கிடைக்க பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.**

சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்.
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி.

(12952)

## ☆ முக்கிய அறிவித்தல் ☆

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
**யாழ்.மாவட்டம்**

- ☆ சகல கல்விக் கோட்டப் பிரிவிலும் இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் அனைத்தும் 14.01.2003 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட வேண்டும்.
- ☆ இது இறுதியான அறிவித்தலாகும். இத்திகதிக்கு பின்னர் பதிவு செய்யாமல் இயங்கும் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

*செயலாளர்.*
த.க.நி.ஒன்றியம், யாழ்.மாவட்டம்.

(12947)


## இணுவில் - பொருளியற் கல்லூரி

*கே.கே.எஸ்.வீதி, இணுவில்.*

**ENGLISH**

பட்டப்படிப்பு - சகல வருட மாணவர்களும்
எத்துறையினரும் இவ்வகுப்பில் கலந்துகொள்ளலாம்.
வினா - விடை வகுப்பும் நடைபெறும்.
செவ்., புதன், வியாழன் - 3.00 - 5.00 (ப.நே)
LECTURED BY :- NISHANTHAN (Dip.in.Eng.)
(12380)

## தேவை

நகை வேலைக்குரிய மெசின்கட் பட்டம் வெட்டக் கூடிய மிகவும் திறமையுள்ளவர் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
பா.கண்ணன்
594/2, நாச்சிமார் கோவிலடி,
T.P.No. 2225481. (12346)

## அறிவொளி-நல்லூர்

இணைந்த கணிதம்
B.ரவீந்திரன B.Sc.
A/L 2004
☆ நிகழ்தகவு ☆
ஆரம்பம்:
09-01-2003 (Thu) 4.00 p.m
(12902)

## கணக்கீடு

A/L 2003 DAY
ஒற்றைப் பதிவு
09.01.03 நாளை 11 a.m
கிரயக்கணக்கீடு
09.01.03 நாளை 1 p.m
S.தவா
B.Com (Hons) (Acc.Spl)
NEW SCIENCE COLLEGE
JAFFNA.
(12944)

## I.B.S

நல்லூர்க் கிளை
A/L 2004 [புதிய பிரிவு]
தமிழ்
M.P.பாலமுரளி
B.A.(Hons), (Tam.Spl)
☆ செய்யுள் தொகுப்பு
☆ இலக்கணம் (எழுத்தியல்)
ஆரம்பம் : 09.01.2003 3.30 p.m.
(12945)

## நிறைஞ்சனாஸ்

சங்கானை
சூர்யா, லைலா, ஸ்னேகா நடித்த
உன்னை நினைத்து
கா.நே. - 11.00, 2.45, 6.00
10.01.2003 முதல்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி மட்டும்
SPIDER MAN
(C/25777)

## நாகம்ஸ்

சுன்னாகம்
அஜித், கிரண், மீனா நடித்த
வில்லன் (ரீல்ஸ்)
குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்
காட்சிகள்: 11.00, 3.00 மணி
விசேட காட்சிகள்:
வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 மணி
(12941)

## ராஜா

யாழ்ப்பாணம்.
முரளி, ராதிகாசௌத்திரி,
வடிவேலு, மணிவண்ணன்
நடித்த
சுந்தரா ட்ராவல்ஸ்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30
(C-25781)


## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமையாற்றும்
**மா.கனகரட்ணம்**
அவர்களின் அன்புத்தாயார்

**05.01.2003 இல் இயற்கையெய்திய செய்தி கேட்டு, எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இரங்கலையும் தெரிவிக்கிறோம்.**

- யாழ்.கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள் -

(C-23875)

## பிரிவுத்துயர்



(C/25880)

எமது முன்னாள் முதல்வர்
**வே.சி.சிவபாலசிங்கம்**
அவர்களை இழந்து வருந்தும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.
**பழைய மாணாக்கர் அவை,**
யா/பெரியபுலம் ம.வி., யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
**சி.சிவபாலசிங்கம்**

**அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.**

*யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்,*
*யாழ்ப்பாணம்.* (12949)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பிள்ளை பராசக்தி (காரைநகர்)

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை பராசக்தி நேற்று (07.01.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும் சிவபாதம் (ஆசிரியர், யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்), திருமதி புவனேஸ்வரி கணேசமூர்த்தி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி மகாலட்சுமி சிவபாதம் (ஆசிரியை, யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), சு.கணேசமூர்த்தி (ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி) ஆகியோரின் மைத்துனியும் சாரதா, சிவகௌரி ஆகியோரின் மாமியும் ஸ்ரீபவன், பிரசாந்தன், ஷஜீஸ், ஆரூரன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.01.2003 பி.ப. 2.00 மணியளவில் மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவலடி ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (12953)

தகவல்:
க.சிவபாதம்.
(சகோதரன்)

## சீனியன் வைத்திலிங்கம்

இலந்தைக்காடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சீனியன் வைத்திலிங்கம் அவர்கள் நேற்று (07.01.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பூபாலு மற்றும் சின்னப்பிள்ளை, அசுபதி, குண்டுமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவமணி (இலங்கை), இன்பவதி (ஜேர்மனி), கனகாம்பிகை (ஜேர்மனி), குணசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராசையா (இலங்கை), இராசேந்திரம் (ஜேர்மனி), குணரத்தினம் (ஜேர்மனி), மதிவதனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசகுமார் (டென்மார்க்), சந்திரகுமார் (சுவிஸ்), சசிகுமார் (லண்டன்), சிறீஸ்குமார் (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி O/L மாணவன்), சுரேஷ்குமார் (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன்), சாந்தரூபன் (ஜேர்மனி), பிரசாத் (ஜேர்மனி), சசிகலா (இலங்கை), சத்தியமீரா (ஜேர்மனி), நிரோஜன் (ஜேர்மனி), மதூஷன் (சுவிஸ்), தனலட்சுமி (டென்மார்க்), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனாரும் ரஜீவன் (டென்மார்க்) அவர்களின் பூட்டனும் சீவரத்தினம் அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2003) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலந்தைக்காடு,*
*வல்வெட்டித்துறை.* (12948)

தகவல்:
வை.குணசிங்கம் (மகன் - சுவிஸ்)
மா.இராசையா (மருமகன்)

## கந்தையா சபாரத்தினம் (சேனாதி)

சேனாதி என்று அன்பாக அழைக்கப்படும் கந்தையா சபாரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் இரத்தினம் (கனடா), செல்வரத்தினம் (மாத்தளை), கனகரத்தினம் (நாவற்குழி), காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் நாகரத்தினம் (நல்லூர்), முத்தம்மா (வவுனியா), காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோகரன், சோதிராஜா (இந்தியா), சாந்தலிங்கம், மூர்த்தி, கணேசலிங்கம் ([illegible]), காந்திமதி (வவுனியா), சித்திராமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோஜினிதேவி, இரஞ்சினிதேவி, ஜெயராணி, இன்பவதி, சந்திரலேகா, சிவபாலன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2003) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் இல. 34, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34, இராஜேஸ்வரி வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.* (12943)

தகவல்:
ச.மனோகரன்
(மகன்)

தற்கொலைத் தாக்குதலுக்குப் பதிலடியாக

# பலஸ்தீன முகாமினுள் புகுந்து இஸ்ரேலியப் படை சுட்டது!

காஸா,ஜன.8

காஸா குன்றுப் பகுதியில் மகாசி அகதிகள் முகாமிற்குள் நுழைந்த இஸ்ரேல் இராணுவத்தினர், துப்பாக்கியால் சுட்டதில் 3பலஸ்தீனர்கள் இறந்தனர். நேற்றுமுன்தினம் இரவு இத்தாக்குதல் இடம்பெற்றது.

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவில் இரண்டு இடங்களில் பலஸ்தீனத் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு சென்று வெடிக்கச் செய்ததில் 23பேர் இறந்தனர். இதையடுத்தே பலஸ்தீனப் பகுதியில் மகாசி அகதிகள் முகாமில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலிய இராணுவம் சுட்டதில் நஸீம் அல் மெஹூலா (வயது25), பாக்கர் ஹதுரா (வயது25), அபுசயாத்(வயது28) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

கவச வாகனங்கள் சகிதம் அகதி முகாமிற்குள் இஸ்ரேலிய இராணுவம் நுழைந்ததாகவும் - அவ்வேளையில் இஸ்ரேலிய ஹெலிகளும் 'ரொக்கட்' தாக்குதலை மேற்கொண்டதாகவும்- பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர். இது ஒருபுறமிருக்க, பலஸ்தீன அதிகார சபையை மறுசீரமைப்பது தொடர்பாக பிரிட்டனில் இடம்பெறும் பேச்சில் கலந்துகொள்ள பலஸ்தீன அதிகாரிகள் மேற்குக்கரையில் இருந்து செல்ல அனுமதியளிக்கப் போவதில்லை என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. டெல்அவிவில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்த நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டுள்ளது. (ஒ)



காஸாவில் அகதிமுகாம் மீது இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதலில் அருகில் இருந்த குடியிருப்புக்களும் கடும் சேதமடைந்தன. அவ்வாறு சேதமுற்ற தனது மூன்று மாடிக் கட்டடத்தை பார்வையிடும் பலஸ்தீனர் ஒருவரைப் படத்தில் காணலாம்.

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்ரன்.ஜன.8

வடகொரியா மீது தாக்குதல் நடத்தும் திட்டம் எதுவும் இல்லை என்று அமெரிக்க அதிபர் அறிவித்துள்ளார்.

அணு ஆயுதத் தயாரிப்பில் வடகொரியா தீவிரமாக ஈடுபட்டு வருவதாக சமீபகாலமாக அந்நாடு மீது அமெரிக்கா குற்றம்சாட்டி வந்த நிலையில், மேற்கண்ட அறிவிப்பை புஷ் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தற்போது கடும் குளிர் நிலவுகிறது. பனிப்பொழிவும் அதிகம் உள்ளது. அமெரிக்காவின் வாஷிங்ரன் நகரில் சில அங்குல உயரத்துக்கு பனியால் மூடப்பட்ட வீதிவழியே ஜோடி ஒன்று செல்வதைப் படத்தில் காணலாம்.

ஈராக்கில் முதல் தடவையாக

# பேரழிவு ஆயுதங்கள் குறித்த வான்வழிச் சோதனை ஆரம்பம்


பக்தாத்,ஜன.8

ஈராக்கில் வான்வழி கண்காணிப்பை ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்கள் நேற்று ஆரம்பித்தனர்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள ஐ.நா ஆயுதப் பரிசோதகர்கள்; ஆகாய மார்க்கமான தமது சோதனை நடவடிக்கையை முதற்றடவையாக ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக்காலை ஐ.நாவுக்குச் சொந்தமான 3 ஹெலிகள், பரிசோதகர்களை ஏற்றிக்கொண்டு பக்தாத்தின் இராணுவ விமானத் தளத்திலிருந்து புறப்பட்டுச் சென்றன.

இதேவேளை, ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதற்கான சான்றுகள் எவற்றையும் பரிசோதகர்கள் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என்று சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் தலைவரான மொஹமட் எல்பரடே தெரிவித்துள்ளார். ஐ.நாவுக்கு ஈராக் சமர்ப்பித்த அறிக்கையில் பொய்யான தகவல்கள் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார். (ஒ)



போர் அச்சுறுத்தல் ஈராக்கை சூழ்ந்திருக்கும் இவ்வேளையில், நேற்று பக்தாத்தில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பின்போது ஈராக்கிய மகளிர் துணைப் படையணி அணிவகுத்துவரும் காட்சி. இவர்களில் குடும்பப் பெண்களும் பாடசாலை மாணவியரும் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்குடன் போர் மூளுமானால்

# துருக்கிய தளங்களை பயன்படுத்த அமெரிக்கப் படையினருக்கு அனுமதி!

இஸ்தான்புல்,ஜன.8

ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் மேற்கொள்ளுமானால் தமது துறை முகங்களையும் விமான நிலையங்களையும் அமெரிக்கா பயன்படுத்தலாம் எனத் துருக்கிய அரசு அனுமதி அளித்துள்ளது.

தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முன் ஏற்பாடாக துருக்கியத்துறை முகங்கள் மற்றும் விமானத்தளங்களைப் பார்வையிடவும் அமெரிக்கா அனுமதி வழங்கியிருப்பதாக துருக்கி கூறியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றக் குழுவிற்கு இந்த அனுமதி குறித்து துருக்கி அரசு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அமெரிக்காவின் 150 இராணுவ அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று விரைவில் துருக்கிக்குச் செல்ல இருப்பதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார். (ஒ-12)

உலக அரங்கில்

## பிலிப்பைன்ஸ் தீவில் நிலநடுக்கம்

ஹொங்கொங்,ஜன.8

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த படான் தீவில் கடந்த திங்கட்கிழமை இரவு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவில் இது 5.6 ஆக இருந்ததாக ஹொங்கொங் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

# பாக். – அமெரிக்க மோதல் தவறுதலாக நடந்த ஒன்று!

## முஷாரப், பவல் கருத்து

இஸ்லாமாபாத்,ஜன.8

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் அமெரிக்க மற்றும் பாகிஸ்தான் படைகளுக்கு இடையே சமீபத்தில் ஏற்பட்ட மோதல், தவறுதலாக நடந்துவிட்டது. இனி இதுபோல் நடக்காது என்று பாகிஸ்தான் அதிபர் பாவேஷ் முஷாரப், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

மோதல் சம்பவம் தொடர்பாக முஷாரப், பவல் இருவரும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினர்.

கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் அமெரிக்க வீரர் ஒருவர் மீது பாகிஸ்தான் படைகள் சுட்டன. இதையடுத்து அங்குள்ள இஸ்லாமிய பாடசாலை ஒன்றின்மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசின.

இந்தச் சம்பவம் ஆப்கானிஸ்தானில் நடந்தது. அமெரிக்க விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டு ஒன்று பாகிஸ்தான் எல்லையில் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இதுதவிர, பின்னரும் இரு தரப்புக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. (ஒ)

# பாம்புக்கடிக்கு விஷ முறிவு மருந்து முட்டையில் இருந்து கண்டுபிடிப்பு!

## இந்திய விஞ்ஞானிகள் சாதனை

புதுடில்லி,ஜன.8

கோழி முட்டையிலிருந்து பாம்புக்கடிக்கு விஷ முறிவு மருந்தைத் தயாரிக்கும் புதியமுறையைக் கண்டுபிடித்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர்.

இதுவரை பாம்புக்கடிக்கு விஷத்தை முறிக்கத் தேவையான மருந்தை குதிரைகளைப் பயன்படுத்தித் தயாரித்து வந்தனர். அதற்குக் குதிரைகளின் உடலில் இருந்து ரத்தம் எடுக்கப்பட்டுவந்தது.

டில்லியில் நடைபெற்ற அறிவியல் மாநாட்டில், பெங்களூரில் உள்ள விட்டல் மல்லையா அறிவியல் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி பேராசிரியர் பி.வி.சுப்பாராவ், அப்புதிய முறை குறித்து விளக்கினார்.

பாம்புக் கடி விஷ முறிவு மருந்து தயாரிக்க, குதிரைகளைப் பயன்படுத்தும் முறையில், அவற்றின் உடலில் சிறிதளவு பாம்பு விஷம் செலுத்தப்படுகிறது. அதனால், குதிரைக்குச் சாவு ஏற்பட்டுவிடாது. ஆனால், அதைத் தொடர்ந்து அதன் உடலில் அந்த விஷத்தை எதிர்க்கக்கூடிய நுண்ணுயிரிகள் உருவாகத் தொடங்குகின்றன. அவை குதிரையின் இரத்தத்தில் இருக்கும்.

அவற்றின் உடலில் இருந்து இரத்தத்தை எடுத்து, அதிலிருந்து அந்த விஷ முறிவுப் பொருளை எடுத்து பாம்புக்கடி விஷமுறிவு மருந்து தயாரிக்கப்படுகிறது.

இதற்கு மாறாக, பாம்புக்கடி விஷ முறிவு மருந்தைத் தயாரிக்கப் புதிய முறையைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இந்திய விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். கோழிக் குஞ்சுகளை அதற்குப் பயன்படுத்தினர்.

கோழி, குஞ்சாக இருக்கும் பொழுதே அதன் உடலில் சிறிதளவு பாம்பு விஷம் செலுத்தப்படும். உடனே அதை எதிர்க்கும் நுண்ணுயிரிகளை கோழிக்குஞ்சுகளின் உடல் உற்பத்தி செய்யத் தொடங்கும். அவை பருவம் அடைந்து முட்டையிடும்போது, அந்த முட்டைகளில் அவ்விஷமுறிவுப் பொருள்கள் திரண்டிருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். ஒவ்வொரு முட்டையிலும் 50 மில்லி கிராமிலிருந்து 100 மில்லி கிராம் வரை, அந்த விஷ எதிர்ப்புப் பொருள் உள்ளது. அதிலிருந்து 5இலிருந்து 10 மில்லி கிராம் விஷ முறிவு மருந்தைத் தயாரிக்கமுடியும். ஒரு கோழி ஆண்டுக்கு சராசரியாக 240 முட்டைகள் இடுகின்றது.

எனவே, குதிரை இரத்தத்தில் இருந்து தயாரிப்பதைவிட கோழி முட்டையில் இருந்து அதிக அளவில் விஷ முறிவு மருந்தைத் தயாரிக்க முடியும். அதாவது ஒரு லீற்றர் குதிரை இரத்தத்திலிருந்து தயாரிக்கும் மருந்தை 50 முட்டைகளில் இருந்து தயாரித்துவிட முடியும்.

கோழி முட்டையில் இருந்து தயாரிக்கப்பட்ட விஷ முறிவு மருந்தை எலிகளில் செலுத்தி சோதித்ததில் வெற்றி கிடைத்துள்ளது. இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் வர்த்தக ரீதியில் அதன் உற்பத்தி தொடங்கிவிடும் - என்று விஞ்ஞானி சுப்பாராவ் தெரிவித்தார். (ஒ)

# மதமாற்றத் தடைச்சட்டத்தின்கீழ் தமிழகத்தில் முதல் விசாரணை

தமிழகத்தின் திருப்பத்தூர் அருகே பணம் கொடுத்து மதம் மாறும்படி கட்டாயப்படுத்துவதாக மதகுருமீது பெண் ஒருவர் கொடுத்துள்ள முறைப்பாட்டையடுத்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

ஜோலார்பேட்டை, அண்ணா தெருவைச் சேர்ந்தவர் ரங்கன். அவரை எலகிரிமலை, அத்தனாவூர் கிராமத்தைச் சேர்ந்த மதகுருவும் மற்றும் மூவரும் ரூபா 25 ஆயிரத்திற்கான காசோலையைக் கொடுத்து குடும்பத்துடன் மதம் மாற வற்புறுத்தினார்களாம்.

அதற்குச சம்மதிக்காத ரங்கனை அவர்கள் அழைத்துச் சென்றுவிட்டதாகவும் - கணவர் வீடு திரும்பாததையடுத்து குடும்பத்துடன் தற்கொலை செய்துகொள்ளப்போவதாகவும் - மனைவி சிந்து அப்பகுதிப் பிரதேச செயலரிடம் முறையிட்டார். இதுகுறித்தே விசாரணை நடத்தப்படவுள்ளது. தமிழகத்தில் மதமாற்றத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், அதன்கீழ் விசாரணை நடத்தப்படும் முதல் முறைபாடு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நிறுவனத்தின் முத்த உறுப்பினரும்
கொழும்புப் பிரதிநிதியுமாகிய

### திரு. எம்.கருணாநிதி

அவர்கள் கல்வித்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றமைக்காக அவருக்கு எமது பாராட்டுதலையும் வாழ்த்தினையும் தெரிவிக் கின்றோம்.

(சி-25874) - வதிரி அபிவிருத்தி நிறுவனம்.



## DXN புதிய முகவர்கள்

யாழ்.மாவட்ட மக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு மேலும் இந்து புதிய முகவர்களை நியமித்துள்ளோம். ரிஷிகாளான் மருந்து வகைகளைக் கீழ்க்காணும் முகவர் நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

1. டாக்டர் ந.சத்தியசீலன்
மெடி கிளினிக்
தொட்டிலடி
சண்டிலிப்பாய்.

2. டாக்டர் ந.பத்மநாதன்
றோயல் ஃபார்மெடிக்கல் சென்றர்,
வதிரி கரவெட்டி.
0777 147017

3. திரு.மு.தியாகராசா
ஏழாலை மேற்கு.
ஏழாலை.
0777 491655

4. திரு.கே.சிவசுந்தரமூர்த்தி
பெரியபுலம் வீதி.
கோண்டாவில் றோட், இருபாலை.
0777 291975

5. திரு.மா.ஞானலிங்கம்
"அபிராமி மகால்"
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
070 212631, 0777 497022

## மூலிகைகளின் அரசன் ரிஷி காளான்

மலேசியா DXN நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு இந்தியா உட்பட 22 நாடுகளில் பாவனைக்கு உட்பட்டு வரும் ரிஷி காளான் எம்நாட்டிற்கு அறிமுகமானது மக்களுக்குப் பெரும் பேறாகும்.

ரிஷி காளான் கொண்டு தயாரித்த மாத்திரைகள்; கோப்பி, பற்பசை முதலிய மருந்துப் பொருள்களைப் பெற்றுப் பயன் அடையுங்கள்.

சலரோகம், புற்றுநோய், ஆஸ்துமா, அல்சர், பிள்ளைப் பேறு, காசநோய், இருமல், சளி, தலைவலி, ஒவ்வாமை, கொலஸ்ட்ரோல், இரத்த அழுத்தம், நரம்பியல் நோய்கள், பாலியல் நோய்கள், தோல் நோய்கள், இருதய நோய்கள், கண் நோய்கள், சிறுநீரக நோய்கள், நாள்பட்ட நோய்கள், கர்ப்பப்பைக் கோளாறுகள், ஆட்கொல்லி நோய்கள் என்பவற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது.

ரிஷி பல பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு.

பக்க விளைவுகள் இல்லாதது; உடலில் உள்ள செல்களின் மீது செயற்படக்கூடியது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**Magnum Investments (Pvt.) Limited**
*15, Stamboul Place, Colombo - 03*
*Tel: 575753, 074-723396*
*Fax: 074-723396*
*E-mail: magnum@zeylan.net* (சி-25873)



## இரண்டாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



மலர்வு 30 - 05 - 1932

உதிர்வு 08 - 01 - 2001

### அமரர் கயித்தான் நீக்கிலஸ் ஆசீர்வாதம்

*(முன்னாள் உறுப்பினர், யாழ். மாநகராட்சி மன்றம்)*

*சமூகத்தின் விடி வெள்ளியாய்*
*தமிழினத்தின் காவலனாய்*
*காலமெல்லாம் இலட்சியத்தை*
*காத்து நின்ற எம்மூரவே!*

எங்கள் உயிருள்ளவரை உமது நினைவுகள் நிலைத்து நிற்கும்.

32, பார்க் றோட், றெக்கிளமேசன், குருநகர்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(12874)


### வடமராட்சியில் ஐஸ் தொழிற்சாலை

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசம் சிறிய அளவிலான ஐஸ் தொழிற்சாலையொன்றினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இத்தொழிற்சாலையில் 25 கிலோ எடைகொண்ட 14 ஐஸ்கட்டிகளை நாளொன்றுக்கு உற்பத்திசெய்ய முடியும். (ஓ-173)

### தையல் பயிற்சிக்கு நேர்முகப்பரீட்சை

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள தையல், மனையியல் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் பாலாவோடை வீதியிலுள்ள காரை தெற்கு (ஜே/44) கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் கல்விச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், கிராம அலுவலரின் நற்சான்றிதழ் அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-73)

### மாத நடுப்பகுதியில் கல்வியியற் கல்லூரி புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் இம்மாதம் நடுப்பகுதி முதல் இயங்கவுள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது.

இராசவீதியில் பலகோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் இக்கட்டடத்தின் ஒரு கட்டடத் தொகுதியில் மட்டுமே வகுப்புகள் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், ஏனைய கட்டடத் தொகுதிகள் எதிர்வரும் காலத்திலேயே கட்டம் கட்டமாக கட்டப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-180)


## தங்கமுலாம் பூசுதல்

எம்மிடம் வெள்ளி, செம்பு, பித்தளை நகைகள், திருமண, நடன சோடனை செற், கோயில் நகைகள், அங்கிகள் போன்றவற்றுக்குச் சிறந்த முறையில் தங்கமுலாம் (கில்ற்) பூசிக்கொடுக்கப்படும்.

M.H.M.மொகமட் சபர்
(ராஜா தியேட்டர் முன்பாக)
74/1, கஸ்தூரியார் வீதி,
(12930) யாழ்ப்பாணம்.



## POSTS VACANT

A reputed Engineering firm with over 80 years of existence in Sri Lanka with a view to expand it's services of the Jaffna Branch invites applications from suitably qualified and experienced candidates for the following posts.

- ☆ **Electrical & Electronic Engineer**
- ☆ **Civil Engineer**
- ☆ **Clerk**
- ☆ **Salesman** (Experienced in hardware sales)

Applicants are requested to call over in person along with CV, originals of certificates at the address given below on 13th January 2003 at 10.00 a.m.

**Samuel Sons & Co. Ltd.**
*412, 414, Hospital Road (Adjoining Hatton National Bank) Jaffna.*
(12925)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1936 - 04 - 02

உதிர்வு 2002 - 12 - 09

### அமரர் மாணிக்கர் சின்னத்துரை

*எம் பாசமிகு அன்புத் தந்தையே!*
*எம்மை வளர்த்து ஆளாக்கியவரே!!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (08.01.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்புத் தந்தையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி, குப்பிளான், ஏழாலை. (12929) - குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி இலம்போதரராஜா புவனேஸ்வரி

காரைநகர், முல்லைப்புலவு கோவளத்தைப் பிறப்பிடமாகவும் 155ஆம் கட்டை, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இலம்போதரராஜா புவனேஸ்வரி நேற்று (07.01.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை இலம்போதரராஜாவின் அன்பு மனைவியும் முருகேசு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் கனகசபை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் அன்னலட்சுமி, ஜெயலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கிளிநொச்சி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

155ஆம் கட்டை, கிளிநொச்சி. (12933)
தகவல்: இலம்போதரராஜா (கணவர்).



## ULTRA HEALTH CARE (Australia Holdings)

ULTRA HOSPITAL SUPPLIES

### FOR OUR ENHANCED SERVICES WE NEED

- MEDICAL OFFICERS
- MEDICAL PHYSICISTS
- ACCOUNTS ASSISTANTS
- CASHIERS
- LAB TECHNICIANS (PATHOLOGY/CARDIOLOGY/RADIO GRAPHY)
- RADIO GRAPHERS
- PHARMACISTS
- RECEPTIONISTS
- SECURITY GUARDS
- ELECTRICIANS
- ADMINISTRATIVE OFFICER
- COMPUTER OPERATOR
- SISTERS
- NURSES
- MALE NURSES

Applicants, please send copies of your educational certificates and Experience certificates along with your application.

*Please apply within 10 days of this advertisement.*

**The Managing Director,**
**Ultra Health Care,**
**740, Navalar Road, Jaffna.**

☎ 222 3393
e-mail: ultraintl@hotmail.com
Mobile: 0777 434175
0777 244725

**யாழ்.குடாநாட்டு லொறி உரிமையாளர்களுக்கான**

## அறிவித்தல்

**பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து சிமெந்து இறங்கிக்கொண்டிருக்கிறது. உங்கள் லொறிகளுக்கு யாழ்.குடாநாட்டிற்குள் விநியோகம் செய்வதற்கு பக்கற் ஒன்றுக்கு ரூ.10 போக்குவரத்துக் கூலியாக வழங்கப்படும். ஏற்றவிரும்புபவர்கள் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**ஈஸ்வரபகவான் & கம்பனி**

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-2222350 (C/25878)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து பரநிருபசிங்கம்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சரவணமுத்து பரநிருபசிங்கம் (முன்னாள் பிரபல வர்த்தகர், நியூஸ் ஏஜென்ஸி) அவர்கள் நேற்று (7.1.2003) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரவணமுத்து - செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், பசுபதிநேசன் (முன்னாள் கணக்காளர், C.W.E. - கனடா), நவரத்தினம் (முன்னாள் உத்தியோகத்தர், C.T.B.), பத்மநாதன் (முன்னாள் வர்த்தகர் - ஜேர்மனி), பத்மாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கோமாவதி (முன்னாள் உத்தியோகத்தர், C.W.E. - கனடா), சிவராசமதி, தையல்நாயகி (இந்திரா - ஜேர்மனி), திருச்செல்வம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இரத்தினம் (கனடா), முத்தையா (முன்னாள் வர்த்தகர்), காலஞ்சென்றவர்களான இராசம்மா, நடராசா (முன்னாள் துறைமுக உத்தியோகத்தர்), காராளசிங்கம் (முன்னாள் விமானப்படை போர்மன்), நாகம்மா, கனகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்பவதி (கனடா), இரத்தினம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான பொன்னையா (வைத்தியர்), கதிரவேலு (சிங்கப்பூர் வர்த்தகர்), விசாலாட்சி, செல்லத்துரை (முன்னாள் வர்த்தகர்), நேசமலர், செல்லம்மா, ரேவதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.01.2003), புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக புங்குடுதீவு, மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.இரத்தினபூபதி
(மனைவி)

*புங்குடுதீவு.* (12938)

### கஷ்டப் பிரதேச பாடசாலைகளாக அறிவிப்பு

யாழ்.கல்விவலய பிரதேசத்தில் உள்ள மூன்று பாடசாலைகளை அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், யாழ்.கல்விக்கோட்டத்தில் உள்ள பூம்புகார் அரசினர் தமிழ்க கலவன் பாடசாலை மற்றும் அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவையே அப்பாடசாலைகளாகும். (ஒ-11)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல், இன்று பி.ப. 3.30 மணிக்கு யாழ்பிரதேச செயலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பதிவுசெய்த கழகங்களின் நிர்வாகிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.திருமாறன் கேட்டுள்ளார். (ஒ-5-86)

## பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்

*அன்னை சிவத்தமிழ்ச் செல்வி*

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்கள் தனது 78ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடுவதையிட்டு அவருக்கு நாமும் எமது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவர் மேலும் புவிமீது பல்லாண்டு காலம் வாழ்ந்து சிவத்தமிழ்ப் பணிசெய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,
யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்.

(12931)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர்
வை.பாலேந்திரன் அவர்களின் மாமனார்

**பொன்னையா சுவாமிநாதபிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நலன்புரிச்சங்கம்
யா/இராமநாதன் கல்லூரி

(12393)

## ராம்கோ சிமெந்து

இலங்கையின் மட்டுமா இல்லை

இந்தியாவின் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவின் முதலாம்தர (நம்பர்1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் RAMCO சிமெந்து (கோபுரம் மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு : யாழ்.அரசாங்க அதிபர் திரு. செ.பத்மநாதன் அவர்களின் ஒத்துழைப்பினால், சிமெந்தை பருத்தித்துறை துறைமுகத்தில் ரூ.400/= இற்கு பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

**யாழ்.குடாநாட்டில் ரூ.410/= இற்கு விநியோகம் செய்யப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.**

கூட்டுறவுச் சங்க லொறிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் பருத்தித்துறை இறங்குதுறையில் சிமெந்து வழங்கப்படும்.

வர்த்தகர்கள் தமது லொறிகள் மூலமாக ஏற்ற விரும்பின் தமது லொறிகளை எமது நிறுவனத்தில் பதிவு செய்து சிமெந்தைப் ஏற்றலாம்.

*ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர் :*

**ஈஸ்வரபகவான் & கம்பனி**

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 021-2222350 (C/25879)



FLOOR / CEILING MOUNTED


**FUJICOOL**

**குளிரூட்டும் இயந்திரங்கள்**



WALL - MOUNTED

STAINLESS STEEL



உங்களதுஅனைத்து வித தேவைகளுக்கும் ஏற்ற

**துருப்பிடிக்காத உருக்கிலான**

குளிரூட்டும் இயந்திரங்கள் கடற்கரை விடுதிகளுக்கும் ஹோட்டல் தொடர் மாடி வீடுகளுக்கும் மிகச்சிறந்தவை

**கொம்பிரெஸர் பாகத்துக்கு 5 வருட உத்தரவாதம்**

**வட கிழக்கில் விற்பனை முகவர் தேவை.**


உங்கள் இடத்துக்கே இயந்திரங்களை கொண்டு வந்து இணைத்துத்தரும் செலவு முற்றிலும் இலவசம்

எல்லாவித உதிரிப்பாகங்களும் எளிதில் கிடைக்கும்


சிறந்த விற்பனையின் பின் சேவை.

மொத்த விற்பனையில் மிகச்சிறந்த விலை குறைவு.

WINDOW TYPE



AIR - CURTAIN




REMOTE

**FUJICOOL**
AIR-CONDITIONER

**Fuji Airconditioning (pvt)Ltd.**

25-2/10, 2ஆவது மாடி, பிளாசா கொம்பிளெக்ஸ், காலி வீதி கொழும்பு-06
தொ.பேசி-074-516106/7 பெக்ஸ்-075-515174
சடுதி தொ.பேசி (hotline)-556315


விதியை மதியால் வெல்வோம்
சாஸ்திரக் காரர்கள் சிலரின் கை ரேகையைப் பார்த்து விட்டு "இந்தக் கை ரேகைக் காரருக்கு பணம் சேர்க்கவே முடியாது" என்பார்கள். ஆனால் தேசிய சேமிப்பு வங்கியை நாடி வரும் எந்தக் கை ரேகைக் காரருக்கும் சேமிப்பு நிச்சயம்.
சேமிப்பின் முன்னோடிகளான தேசிய சேமிப்பு வங்கி தற்போது முதன் முறையாக சேமிப்பு வைப்புக்களுக்கு ஆயுட் காப்புறுதியை வழங்குகின்றது.
2003 ஜனவரி 1ம் திகதி முதல் புதிய மற்றும் செயற்பாட்டிலுள்ள அனைத்து சேமிப்புக்களுக்கும் இக் காப்புறுதி வழங்கப்படும்.
சேமிப்பும் காப்புறுதியும் சேர்ந்து கிடைப்பது எங்கே?
இப்போது மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக ரூபா. 10,000ற்கு குறையாத சகல சேமிப்புக்களுக்கும் ரூபா. 300,000 வரை இலவச ஆயுட் காப்புறுதி
NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி



யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று 'மினி ரெனிஸ்' அங்குரார்ப்பண விழா இடம்பெற்றது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றுவதை முதல் இரு படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டோரை 3 ஆவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: வசந்தன்)

# பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற வசதி

அரியாலை,ஜன.8

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களில் ஐந்து வருடங்கள் பணியை நிறைவு செய்தவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுக் கொள்வதற்கான புதிய நடைமுறையை கூட்டுத்தாபனம் அமுலுக்குக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய நடைமுறையை அடுத்து சுமார்2ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெவித்தன.

இதேவேளை, கூட்டுத்தாபனத்தின் யாழ்பிராந்திய அலுவலகத்தில் பணியாற்றும் மூன்று பணியாளர்கள் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்திருப்பதாக கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிததன.

திருமலை எரிபொருள் குதங்களை அரசு இந்தியாவுக்கு வாடகைக்கு வழங்கியதை அடுத்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது ஆளணியை குறைக்க வசதியாகவே சுயவிருப்பு ஓய்வுபெறும் நடைமுறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

# இராணுவத் தளபதியின்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அத்திட்டத்தை அரசு எப்படி செயற்படுத்தப் போகின்றது என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

*கேள்வி:* இந்த மாதிரியான நிலையில் மோதல் தணிவு தொடர்பான உப குழுவின் நிலை என்ன?

*பாலா:* அந்த உபகுழு இப்போது செயலற்றுப் போய்விட்டது. அந்த உபகுழுவை இனிச் செயற்படுத்துவது இல்லை என நாம் முடிவு செய்து விட்டோம். அந்த உபகுழுவுக்கு யாழ்.மாவட்டத்தில் - அரசுத் தரப்பில் யாழ்.மாவட்டத் தளபதி பொன்சேகா தலைமை வகிக்கிறார். அவர் எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத - நீதியற்ற - விடயங்களை நிபந்தனையாக முன்வைக்கின்றார். மனிதாபிமானப் பிரச்சினையை இராணுவ ரீதியான பிரச்சினையாக்கும் உத்தியாக அவர் மாற்றமுயல்கின்றார். அத்தகையவரோடு இருந்து மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? ஆகவே, இந்த உப குழுவை இனிமேல் செயற்படுத்துவதில்லை என்ற முடிவை அரசுக்கு திட்டவட்டமாக இன்று தெளிவுபடுத்திவிட்டோம்.

இனிமேல், அவசர, மனிதாபிமானத தேவைகள் மற்றும் புனர்வாழ்வுக்கான உபகுழுவே இந்த மீள்குடியமர்வு போன்ற விடயங்களையும் கையாளும்.

*கேள்வி:* மோதல் தணிவுக்கான உபகுழுவின் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் என்று கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளதே! அந்தக் கூட்டம் நடைபெறுமா?

*பாலா:* இல்லை. அப்படி எதுவும் நடக்காது.

*கேள்வி:* இதை அரசுத் தரப்புக்கு நீங்கள் தெரியப்படுத்தி விட்டீர்களா? இது இரு தரப்பு இணக்கத்திலான முடிவா?

*பாலா:* நான் உங்களுக்கு உண்மையைக் கூறவேண்டும். தினசரி பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கும் பேராசிரியர் பீரிஸிடம் கேளுங்கள். இந்த உபகுழு தேவையற்றுப் போய்விட்டது (Irrelevant) என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெளிவுபடுத்தி விட்டோம் அதுவே உண்மை.

இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. இதைச் செயற்படுத்துவதற்கு இராணுவத்தின் ஒத்துழைப்பை நாம் கோரினோம். ஆனால், ஏற்கமுடியாத நிபந்தனைகளை அவர்கள் விதித்தார்கள். எனவே, அந்த உபகுழுவையே செயலற்றுப்போக வைத்துவிட்டோம்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்கியுள்ளது. அதனை தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்று பேச்சு நடத்துகின்றது. அத்தகைய இயக்கத்தை வெறு 'சிம்பிளாக' பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்டு 'ஸீரியஸான' ஆவணம் ஒன்றை யாழ் தளபதி முன்வைத்திருக்கின்றார்.

ஜனாதிபதியும் படைத்தளபதிகளும் ஒருபுறம் நின்றுகொண்டு; மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு எதிராகத் தடைகளைப் போடுகின்றார்கள். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் அரசோ இதனை வேறு கோணத்தில் பார்க்கின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு ஒன்றை ஆராயும் அளவுக்கு அரசியல் பேச்சுக்களில் வெகு வேகமாக நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

ஆனால், களத்தில் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படவில்லை. அவர்களின் அவலம் தொடர்கின்றது.

எனவே, அடிப்படை அரசியல் பிரச்சினைகள் குறித்து ஆறுதலாகப் பேசுவோம். அவசரமான - உடனடியாகக் கவனிக்க வேண்டிய - மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து மட்டும் பேசுவோம் என்றும் அரசுத் தரப்புக்குத் தெரியப்படுத்தினோம்.

அதற்கு அரசு இணங்கியது. எனவே, மீள்குடியமர்வு தொடர்பாக மிக முக்கியளவுக்கு இன்றைய பேச்சில் தீர்வுகண்டிருக்கிறோம் என நாம் கருதுகிறோம்.

எனவே, பொறுத்திருந்து பார்ப்போம். தவறான வாக்குறுதிகள் பலவற்றை எதிர்கொண்ட சரித்திர அனுபவம் தமிழ்மக்களுக்கு உள்ளது. பல ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகளைச் செய்தோம். அவை கிழித்தெறியப்பட்டன.

அதேபோன்று இந்த அரசும் நல்ல எண்ணத்தோடு இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியல்வதாகக் கூறுகின்றது. ஆனால், உரிய முடிவை இந்த அரசு நடைமுறைப்படுத்துமா, அதற்கு ஜனாதிபதியும் இராணுவத்தினரும் ஒத்துழைப்பார்களா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால், அதேசமயம், சமாதானப் பேச்சுக்கள் தங்குதடையின்றித் தொடர்கின்றன. இரு தரப்புகளுக்கும் இடையில் கசப் புணர்வுகள் இல்லை. ஆக்கபூர்வமான பேச்சுக்களில் இரு தரப்பினரும் ஈடுபட்டுவருகின்றனர்.

வடபகுதி இராணுவத் தளபதியின் கூற்றுத் தொடர்பாக நான் ஒன்றை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

விடுதலைப் புலிகள் உள்ளே ஊடுருவப் போகிறார்கள் என்று அவர் கூறுவது அர்த்தமற்றது. கேந்திர முக்கியத்துவம் மிக்க பலாலி விமானத் தளம் மற்றும் காங்கேசன்துறைத் துறைமுகம் ஆகியவற்றின் மீது பெரும் தாக்குதல் ஒன்றை புலிகள் தொடுப்பது என்பது சாத்தியமற்றது. அத்தகைய தாக்குதல்களை நடத்தக்கூடிய எல்லையில் நாங்கள் பீரங்கிகளை வைத்திருக்கவில்லை. இத்தனை பரந்த - பெரிய - இராணுவ ஆக்கிரமிப்பு நிலைக்கு மத்தியில் அவ்வளவு வீச்செல்லைத் தூரத்துக்கு பீரங்கிகளை நாம் நகர்த்துவது என்பதும் சாத்தியமற்றது.

*கேள்வி:* மீள்குடியமர்வு விடயத்தில் புலிகள் பிடிவாதமாக - இருப்பார்கள். அதைத் தவிர வேறு எதையும் பேசமாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. பேச்சு இப்போது எப்படி போகின்றது? அரசின் பதிலை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

*பாலா:* நெருக்கடி நிலை இருந்தது என்பது உண்மைதான். எங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. யாழ்.தளபதியின் ஆவணம் தொடர்பாக எங்களின் அதிருப்தியை நாம் எடுத்திக்கூறினோம். அதேசமயம், அரசுடன் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபட நாம் மறுக்கவில்லை. தீவிரமாகப் பேசினோம் எனினும், நட்புணர்வுடன் அவை அமைந்தன. எமது வாதங்களை அரசுத் தரப்பு ஏற்றுக்கொண்டது. அதில் உள்ள நியாயங்களை ஒப்புக்கொண்டது.

*கேள்வி:-* நெடுந்தீவு மற்றும் ஈ.பி.டி.பி. விடயங்கள் குறித்து பேசினீர்களா?

*பாலா:-* இல்லை. ஈ.பி.டி.பி. பற்றி எதுவும் பேசவில்லை.

*கேள்வி:-* பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பு பங்குபற்றுவது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

*பாலா:-* முஸ்லிம் காங்கிரஸ் மூன்று, நான்கு பிரிவுகளாக துண்டுபட்டுப் போயிருப்பது பரிதாபத்திற்குரியது (Tragedy). இந்தக் கட்டத்தில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்த சரியான தலைமை இல்லாமல் போனமை துரதிஷ்டவசமானது. "உங்கள் கட்சியை ஒழுங்குபடுத்துங்கள் (Put your hose in order). அதன் மூலம் சமாதானப் பேச்சுகளிலும் அரசியல் விவகாரக் குழுவிலும் பங்குபற்றுவதற்குத் தகுதியான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஸ்தாபியுங்கள்!" - என்றும் ஹக்கீமிடம் கூறியுள்ளோம். இனி அவரைப் பொறுத்தது.

*கேள்வி:-* ஹக்கீமை நீங்கள் தனியாகச் சந்தித்தீர்களா?

*பாலா:-* இல்லை, இல்லை. நாங்கள் ஹக்கீமை சந்தித்துப் பேசலாம். ஆனால், சரியான பிரதிநிதித்துவம் வரவேண்டும். அது முஸ்லிம்களாலும் தமிழர்களாலும் ஏற்கப்படுவதாக இருக்க வேண்டும்.

முஸ்லிம்களின் துண்டுபட்டிருக்கும் பல பிரிவுகள், அணிகளை ஒன்று திரட்டி இணைத்து அவற்றின் ஆதரவைப் பெற்று தமது தலைமைத்துவத்தை அவர் உறுதிப்படுத்தினாலேயொழிய அரசு தரப்பின் பிரதிநிதியாக வந்ததற்காக அவரை முஸ்லிம்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

*கேள்வி:* பேச்சுகளில் பெண்களுக்கு உரிய பங்களிப்பு வழங்குவீர்களா?

*பாலா:* ஏன் வழங்கப்படவில்லையா? நான் விடுதலைப் புலிகளின் ஆலோசகன் எனது ஆலோசகர் எனது மனைவி. அவர் பங்குபற்றவில்லையா? (சிரிப்பு) அதன்மூலம் மகளிர் பங்களிப்பு உரிய முறையில் வழங்கப்படுகின்றது.

# வன்னியிலிருந்து வருவோருக்கு கொடுப்பனவில் முன்னுரிமை

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துவரும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவிததன.

அண்மையில் உலக வங்கியினால வழங்கப்பட்ட 31 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியில் ஒரு பகுதியிலிருந்தே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்பு வருகைதந்த குடும்பங்கள் மற்றும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்கள் ஆகியவற்றுக்கு வசிப்பிடங்கள் இல்லாது இருக்கும் பட்சத்தில் (காணி இருந்தாலும்) முன்னுரிமை அடிப்படையில் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்த 31 மில்லியன் அமெரிக்க டொலர்களின் மிகுதிப் பணம் வடக்கு - கிழக்கில் சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பான தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை -

மீளக்குடியமர்ந்து வரும் குடும்பங்களுக்கு ஏற்கனவே 3 கோடி 20 லட்சம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டுவிட்டதாகவும் செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஐ-10)

# குடாநாட்டு சாரதிகளுக்கு பொலீஸாரின் கருத்தரங்கு

## ஞாயிறன்று வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.பொலீஸ் நிலைய போக்குவரத்து பொலீஸார், குடாநாட்டு வாகனச் சாரதிகள் அனைவருக்குமான - போக்குவரத்து தொடர்பான - வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில நடத்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கில், போக்குவரத்துச்சபை, தனியார் பஸ், ஓட்டோ, கார் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகளை கலந்துகொள்ளுமாறு போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸ் பொறுப்பதிகாரி என்.எம்.பெரேரா அழைப்பு விடுத்துள்ளார். போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாகவும் வாகன அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாகவும் வாகனத்தைப்பேணுதல் மற்றும் விபத்தின் போதான முதலுதவிகள் போன்றன குறித்தும் இக் கருத்தரங்கின் போது விளக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

# துறைமுகத் தொழிலாளர்கள் மறியல் போருக்கு ஆதரவு

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் இன்று மேற்கொள்ளவுள்ள சாத்வீகப் போராட்டத்துக்கு இறங்குதுறையில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் தமது பூரண ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் கட்டுபபாட்டில் உள்ள இத்தொழிலாளர்கள், பாரவூர்தி உரிமையாளர்களுக்கு தமது ஆதரவை வழங்குவார்கள்.

கடந்த 1997 ஆம் ஆண்டு முதல பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்படும் பொருள்களை எமது சங்கத்தைச்சேர்ந்த லொறிகளே ஏற்றி இறக்கி வந்துள்ளன. யாழ்.அரச அதிபருடனான ஒப்பந்தத்தின் பேரிலேயே இப்பணிகளை எமது சங்கம் மேற்கொண்டு வருகின்றது. தமது சங்கத்தில் 350 குடும்பங்கள் தங்கியுள்ளன என்றும், தாங்கள் இத்தொழிலையே நம்பியுள்ளதாகவும் யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்திச் சங்கத்தின் தலைவர் இ.அரிஹரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-173)

# மிற்சுயி சிமெந்து 25ரூபா விலைக்குறைப்பு

யாழ்பாணம்,ஜன.8

மிற்சுயி சிமெந்து பக்கெட்டுகள், யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை முதல் 425ரூபாவிலிருந்து 400 ரூபாவாக விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளன என்று அதனை இறக்குமதி செய்து விநியோகிக்கும் ஈஸ்வரபகவான் கொம்பனி நிர்வாக முகாமையாளர் பி.வரதராஜசிங்கம் தெவித்துள்ளார்.

இவ்விலைக்குறைப்புக்கு அரச அதிபர் செ.பத்மநாதனின் ஒத்துழைப்பே காரணம் என்று அவர் தெரிவித்தார்.

இதனால் சுமார் 45லட்சம் ரூபா பணத்தொகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிச்செல்வது தடுக்கப்படுவதாகவும அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் ஸ்ரான்லி வீதியிலுள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து காங்கேசன் துறைத் துறைமுகத்துக்கு கொண்டுவரப்படும் சிமெந்து, அங்கிருந்து பருத்தித்துறைக்கு இடமாற்றப்படுகிறது. கொள்வனவாளர்கள் நேரடியாக பருத்தித்துறைக்குச் சென்று சிமெந்துப் பக்கெட்டுகளை ஏற்றிவருவதற்கான அனுமதியை நேற்றுமுதல் யாழ்.அரச அதிபர் வழங்கியுள்ளார். இதனாலேயே இவ்விலைக்குறைப்பு சாத்தியமானது என்று தெரிவிக்கப்பட்டது. ஆயினும் யாழ்.நகரத்தில் வைத்து சிமெந்துப் பக்கெட்டுக்களை கொள்வனவு செய்வோருக்கு மேலும் பத்து ரூபா வரை செலவாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

# பாரவூர்தி சங்கத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கத்தினர் நேற்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் குதித்தனர். இதன் போது தனியார் வர்த்தகர் ஒருவரின் லொறி தாக்கி சேதப்படுத்தப்பட்டிருக்கிறது.

தனியார் வர்த்தகருக்கு சுமார் 2 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்துடன் 'சிற்றி ஒவ் லிவர்பூல்' என்ற கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது. அக்கப்பலில் இருந்து இறக்கப்படும் சிமெந்தினை ஏற்றிச் செல்ல தனியார் பாரவூர்தி கூ.சங்கத்தின் லொறிகள் மருதடி முருகன் கோயிலடியில் காத்து நின்றன. இவ்வேளை தனியார் வர்த்தகருக்குச் சொந்தமான மூன்று லொறிகள் சிமெந்தினை ஏற்றுவதற்காக இறங்கு துறைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்தே தனியார் பாரவூர்திச் சங்க லொறிகள் சீமெந்தினை ஏற்றச் செல்லாது பருத்தித்துறை முருகன் கோயிலடியிலேயே தரித்து நின்றன. தனியார் வர்த்தகர்களின் மூன்று லொறிகள் சிமெந்து ஏற்றிக் கொண்டு வந்தன. அவை பருத்தித்துறை டிப்போவுக்கு அண்மையில் வைத்து வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டன. இதனால் ஒரு லொறியின் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கின.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலீஸாரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

சிமெந்து ஏற்றி வந்த லொறிகள் மூன்றையும் செல்ல அனுமதிக்குமாறும் மேற்கொண்டு உரிய தரப்பினருடன் தொடர்புகொண்டு இப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடி தீர்வுகாணுமாறு பாரவூர்தி சங்க உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏனைய தனியார் வர்த்தகர்களின் லொறிகள் இறங்குதுறைக்கு செல்லாதவாறு தடுக்கப்பட்டன. கப்பலிலிருந்து பொருள் இறக்கும் பணிகளும் ஸ்தம்பிதமடைந்தன.

தனியார் வர்த்தகர்களின் லொறிகள் இறங்குதுறைக்கு செல்வதை தடுத்து சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப்போவதாக பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினர்விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர், விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறையினர் ஆகியோரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-173).

விற்பனையாகின்றன!
அஷ்டலக்ஷ்மி தமிழ் டயறிகள் - 2003
- அஷ்டலக்ஷ்மி தமிழ் டயறிகளில் பஞ்சாங்க விவரங்கள்,
மனையடி சாஸ்திரம், விடுமுறை தினங்கள்
மற்றும் பல விவரங்களும் உள்ளன.
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
கிடைக்கும் இடங்கள்:
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், கைதடிச் சந்தி.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி.
(12928)

'கவிக்கோ' அப்துல் ரகுமான்
அவர்களின்
சிறப்புச் சொற்பொழிவு
"இல்லையிலும் இருக்கிறான்"
தலைமை : பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
இடம் : கம்பன் கோட்டம், நல்லூர்.
காலம் : 09.01.2003, வியாழன் பி.ப. 5 மணி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-அகில இலங்கை கம்பன் கழகம்.
(12951)

24 ஆவது ஆண்டில் JTI 24 ஆவது ஆண்டில் JTI 24
JTI
2003 ஆண்டுக்கான கணனி பயிற்சி நெறிகள் ஆரம்பம்
10-01-2003 (கிழமை நாட்களில் 10.30a.m)
11-01-2003 (சனி, ஞாயிறு நாட்களில் 10.30a.m)
Diploma Courses
Diploma in Software Engineering
•Introduction to Computer •Windows XP •MS DOS 8 •Word XP •Excel XP •Visual Basic 6 •Visual FoxPro 6 •"C" •Java •HTML •Internet, E-mail
Duration 12 Months Fees : Reg + Course = 13,500/=
Diploma in Desk top Publishing
•Introduction to Computer •Word XP •CorelDraw 11 •PageMaker 7 •PhotoShop 7
Duration 4 Months Fees : Reg + Course = 3,250/=
Diploma in Microsoft Office XP.
•Introduction to Computer •Word •Excel •Access •PowerPoint •Introduction to Internet, E-mail
Duration 6 Months Fees : Reg + Course = 2,250/=
Diploma in Visual Basic Programming
Duration 4 Months Fees : Reg + Course = 5,500/=
Diploma in Web Designing
•Introduction to Internet •Front Page •HTML •VB Script •Java Script
Duration 7 Months Fees : Reg + Course = 6,250/=
Diploma in Computer Programming
•Introduction to Computer •Visual Basic 6 •pascal •"C" •Oracle •Visual FoxPro 6 •Internet, E-mail
Duration 8 Months Fees : Reg + Course = 3750/=
Diploma in Hardware Engineering
•Hardware Concepts •Assemble a Complete PC System •Software Installations & Configurations •Handling Diagnostic Tools •Networking, Fax modem Connection •Multimedia, Internet •Computer Virus, Troubleshooting
Duration 4 Months Fees : Reg + Course = 4,350/=
Certificate Courses
❖ Word XP ❖ Excel XP ❖ Access XP
❖ PowerPoint XP ❖ Corel Draw ❖ Page Maker 7
❖ Visual FoxPro 6 ❖ HTML ❖ Java ❖ Oracle
2001/2002 பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தங்களுடைய சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவும்.
JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.
REGD NO.:15251 T.P: 2223335
11/10 B, Stanly Road, Jaffna (முட்டாசுக் கடைச் சந்தி)
No-07, Palaly Road, Jaffna (இலுப்பையடி சந்தியருகில்)

## மேலதிக கல்விப்பணிப்பாளர்

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக வி.இராசையா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளராகவும், யாழ் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளராகவும் இவர் தற்சமயம் பணியாற்றிவருகின்றார். (ஐ-3)

## பேச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியே மூன்று, நான்கு துண்டுகளாகிவிட்டன. ஒவ்வொருவரும் தாங்களே முஸ்லிம்களின் பிரதிநிதிகள் என்கிறார்கள். ஆகவே, யார் முஸ்லிம்களின் பிரதிநிதி என்பதில் சந்தேகம் உள்ளது. அந்தச்சந்தேகம் முதலில் தீர்க்கப்படவேண்டும். அதன்பின்னர் முஸ்லிம்களின் பிரதிநிதி என்ற முறையில நீங்கள் பேசுவது குறித்து ஆலோசிகலாம்.

"தவிரவும், நீங்கள் இப்போது அரசுத்தரப்புப் பிரதிநிதியாக இங்கு வந்திருப்பதால் இந்தக்குழுக்களில் முஸ்லிம்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம், பங்களிப்பு வேண்டும் என்ற கோரிக்கைகளை எல்லாம் நீங்கள் அரசின் முன்தான் வைக்கவேண்டும். அரசிடமிருந்துதான் அவற்றைப் பெறவேண்டும். இங்கு வந்து அவைகுறித்துப் பேசுவதால் யாதொரு பயனுமில்லை" இப்படி முகத்தில் அடித்தது போன்று கூறி, ஹக்கீம் குழுவினரின் கோரிக்கைக்கு பாலசிங்கம் முற்றுப்புள்ளி வைத்தார் எனத் தெரியவருகின்றது. பாலசிங்கத்தின் இந்தக் காட்டமான பதிலின் பின்னர் நேற்றுக்காலை அமர்வுகளில் ஹக்கீம் அமைதி பேணியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கடும்போக்கைக் கடைப்பிடிப்பர் என எதிர்பார்க்கப்பட்டது. புலிகளின் சீற்றத்தைத் தணிக்கும் வகையில் அரசுத்தரப்பு பிரதிநிதிகளின் வாதங்கள் அமைந்தன.

"உயர் பாதுகாப்பு வலயங்களை மாற்றியமைப்பது தொடர்பாக நல்லதோர் திட்ட ஆலோசனை ஒன்றை வழங்கும்படி லெப்டினன்ட் ஜெனரல் சதிஷ் நம்பியாரைக் கேட்டுள்ளோம். அவர் இருதரப்புக்கும் நடுவில் உகந்த நிபுணத்துவ ஆலோசனையை வழங்குவார். அந்தத்திட்டம் கைக்கு வந்ததும் பேச்சு நடத்தும் இருதரப்பினரும் ஆற, அமர இருந்து அதன் அடிப்படையில் இப்பிரதேசங்களில் மீள்குடியமர்வுக்கான வரையறைத் திட்டத்தை முடிவு செய்யலாம். லெப்டினன்ட் ஜெனரல் நம்பியாரின் திட்டம், ஓரிரு வாரங்களில் கைக்குக் கிடைத்துவிடும், அதற்கிடையில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் - சர்ச்சையற்ற பிரதேசங்களில் உள்ள - இராணுவத்தினரை அப்புறப்படுத்தி அங்கு மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளலாம்."- இப்படி அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த யோசனையை ஏற்று, லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் நிபுணத்துவ யோசனையின் அடிப்படையிலான திட்டத்தைப் பரிசீலிப்பதற்குக் காத்திருக்க புலிகள் நேற்றைய காலைப் பேச்சுக்களில் இணங்கினர் என்று தெரியவந்தது. (ஐ)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதை உறுதிப்படுத்தியிருக்கின்றன என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் உதயனுக்கு, தெரிவித்தன.

ஒன்றுக்கு மேற்பட்ட காய்ச்சல் நோயாளிகள், 'டெங்கு' காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பது ஆய்வில் தெரியவந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஐ-3)

CHEMISTRY CENTRE
A/L 2005
CHE. - Mon., Fri. 3 - 4 p.m.
PHY. - Mon., Fri. 4 - 5 p.m.
BIO. - Mon., Fri. 5- 6 p.m.
MATHS. - Mon., Fri. 5 - 6 p.m.
"வகையீட்டின் பிரயோகம்"
"நியூட்டனின் இயக்க விதிகள்"
Wed., Thu., Sat. 6.15 - 7.30 a.m.
(4709)

# புலிகளின் எதிர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுத்துவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டதாக அன்ரன் பாலசிங்கம் நேற்று மதியம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்பு வலயங்கள் உட்பட இடம்பெயர்ந்த சகல பிரதேசங்களிலும மக்கள் மீளகுடியமர்வது மனிதாபிமானப் பிரச்சினையாகும்.

இந்த மனிதாபிமான பிரச்சினையை இராணுவத் தரப்பினர் இராணுவ மயப்படுத்தி, புலிகளின் ஆயுதக்களைவுடன் அதை நிபந்தனையாக தொடர்புபடுத்தி நிலைமையை மோசமடைய வைத்துவிட்டனர். இதற்கு மேலும் மக்களின் மனிதாபிமான விவகாரங்களை இராணுவ மயப்படுத்துவதை அனுமதிக்க முடியாது. அது சமாதானப் பேச்சுக்களையும் அமைதி நிலையையும் கூடக் குழப்பிவிடும்.

எனவே, இராணுவத்தினருடன் தொடர்புபட்ட இந்த மோதல் தணிவுக்கான உபகுழுவின் செயற்பாட்டையே நிறுத்திவிடுவது என்ற முடிவுக்குப் புலிகள் வந்தனர்.

அது பேச்சுக்களின்போது அரசுத்தரப்புக்கு தெரியப்படுத்தப்பட்டுவிட்டது.

இந்த நிலைமை ஏற்பட்டதற்கும் உபகுழு செயலிழந்துபோனதற்கும் இராணுவத் தரப்புத்தான் முழுக்கப் பொறுப்பேற்க வேண்டும்.

சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்காத அவர்களின் கடும் இராணுவத்தனமான போக்கே, இந்த உபகுழுவின் செயற்பாடுகளையே கைவிடச் செய்யும் அளவுக்கு எம்மைத் தள்ளியுள்ளன.

இந்த உபகுழுவினால் கையாளப்படவேண்டிய மனிதாபிமானப் பணிகளை மற்றைய உபகுழுவான அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவே - இனிமேல் கையாளும் - என்றார் அன்ரன் பாலசிங்கம். (ஐ)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசிறல், நுளம்புகளை - குறிப்பாக - 'டெங்கு' பரப்பு நுளம்பு வகைகளான எய்டிஸ் ஜிப்ரி (யுநனநள நுபலிவை), எய் டிஸ் அல்போபிடஸ் (யுநனநள யடகழிை உ வரள) ஆகிய நுளம்புகளை அழிக்க வல்லது.

ஆயினும், இந்த நுளம்புகள் தொடர்ந்தும் உருவாகாமல் தடுக்க வேண்டுமாயின், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது என்று வைத்தியகலாநிதி க.சிவயாதம் தெரிவித்தார்.

நேற்றும், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும் யாழ்.ஆஸ்பத்திரி மற்றும் அதன் சுற்றுப்புறங்கள், வீதிகளில இந்த மலத்தியோன் விசிறும் பணி இடம்பெற்றது. நேற்று நண்பகலுக்குப் பின் நகரப் பகுதிகளுக்கும் இந்த நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டது. (ஐ-3-9-15-139)

Jaffna Technical Institute
No.07, Palaly Road, Jaffna. (இலுப்பையடிச் சந்தியருகில்)
இலவச கணனிப் பயிற்சிநெறி 2003
CHILDRENS PROGRAM
காலம்: 3 மாதம்
2002 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரிவு 3 ஆரம்பம
11.01.2003 - 3.30 மணிக்கு
(12942)

நேற்று....
Super hit Theirty Mega Musical Show - 2003
இயல், இசை பொங்கல் விழா
எதற்காக? மட்டுவில் பிரதேச அபிவிருத்தி நிதிக்காக.
எங்கே? கேடில்ஸ் விளையாட்டு மைதானத்தில்.
எப்போது? 12.01.2003 பிற்பகல் சரியாக 4.30 - இரவு 12.00.
யாரால்? வளர்மதி கிராமிய அபிவிருத்திச் சங்கத்தால்.
என்ன நிகழ்வு? மாவட்ட ரீதியில் அதிசிறந்த பிரமிப்பூட்டும் கலை நிகழ்வுகள்.
நிகழ்ச்சி வகை? நான்கு வேறுபட்ட சுவையுடைய புதுவிதமான மகிழ்வுணர்வுகளை தரக்கூடிய, கல்வியில் முன்னேறிய, மாவட்ட ரீதியான, பல்கலை ரீதியான இளம் இளைஞர், யுவதிகள் பங்குபற்றும் கலை நிகழ்வுகள்.
நுழைவுக் கட்டணம்? பெரியோர் 50/- சிறியோர் 30/-
எங்கே பெறலாம்? சாவகச்சேரியில் - மகாநதி புடைவையகம்,
நியூ அருண் அச்சகம் & புத்தகசாலை
கைதடியில் - மானிப்பாய் வீதியிலுள்ள வீடியோ கடை
மட்டுவிலில் - வளர்மதி கல்வி நிலையம்
இதற்கு என்ன உத்தரவாதம்? கிராமிய அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள்.
அப்ப முடிவு? கட்டாயம் வரத்தான் வேண்டும்.
Note : இடம்பெயர்கால சங்கானை, மல்லாகம் ஏனைய வலிகாமம் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம
மட்டுவில். - கிராமிய அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள்.
(12904)

## மரண அறிவித்தல்

### சிவகுரு சிவபாலசிங்கம்

*(இளைப்பாறிய அதிபர், பெரியபுலம் மகாவித்தியாலயம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க மாவட்ட செயலாளர்)*

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு சிவபாலசிங்கம் கடந்த, சனிக்கிழமை (04.01.2003) காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் (இளைப்பாறிய ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் சுகுணரஞ்சன், காலஞ்சென்ற சுகுணஜீவன் மற்றும் சுகுணரஞ்சனா (அவுஸ்திரேலியா), சுகுணகபிலன் (கனடா), சுகுணபாரதி (கனடா), சுகுணபரராஜன் (பிரான்ஸ்), சுகுணநாவலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலராணி, கனேந்திரராசா (அவுஸ்திரேலியா), ராஜமாலினி (கனடா), சிவபாலன் (கனடா), கல்பனா (பிரான்ஸ்), நோறா (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பிள்ளையம்மா, பொன்னுப்பிள்ளை, நாகரத்தினம், பரராஜசிங்கம் மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்தர், கார்த்திகேசு, பொன்னையா, ராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஜீவநந்தினி, பிரஜீவன்ராம், வீரோசன், அகிலன், காநுகா, காருண்ணியா, வியோசனா, திவ்வியன், அஜீத்தா, சுஜவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2003) வியாழக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 3.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அறிவகம்",
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.

தகவல்:
சி.சுகுணரஞ்சன் (மகன்),
சி.சுகுணபரராஜன(மகன் - பிரான்ஸ்)
(12950)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.